உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-136

விருப்ப சந்தா இதழ்



# துரதிர்ஷ்டத்தை போக்கும் தயிர்

## முக்தி என்பது என்ன?

உனக்கு ஒரு பொருளின் மீதோ, அல்லது நபரின் மீதோ, அல்லது ஓர் உணவுகள் மீதோ அளவற்ற ஆசைகள் இருக்கும், அவ்வாசைகளை முற்றிலுமாக புதைத்து எல்லாம் மாயை என உணர்தலே முக்தி..!!!

ஒரு ஆன்மாவிற்கு முக்திநிலை என்பது ஆறிலும் வரும், அறுபதிலும் வரும்...

ஆன்மாவை உணர்த்தவே ஆன்மீகம், ஆன்மீகத்தின் துணை கொண்டு உன்னுள் இருக்கும் இறையை உணர்வதே தெய்வீகம்..!!!




## மாயையை உணர்வது எப்படி..??

பெருங்காய டப்பாவில் பெருங்காயம் என்பது உன் வாழ்க்கை, அதில் பெருங்காயம் காலியாகிவிட்டாலும் அதன் வாசனைபல மாதங்களுக்கு இருக்குமே அதுவேமாயை...!!!

## ஞானம் என்பது என்ன?

விட்டுவிடுதல் அல்ல ஞானம். அதே போன்று பிடித்துக் கொள்ளுதலும் அல்ல ஞானம். வந்தது வரட்டும், போனது போகட்டும் என்ற நிலையே ஞானம்...

# கனவு பலிக்க இதை செய்யுங்கள்

கனவில் தங்கம், வெள்ளி, பணம், நகைகள் என்று ஏதாவது ஒன்று கிடைப்பது போல கனவில் தோன்றுவது இயல்பான ஒரு விஷயம் தான். இதுபோன்ற கனவு வந்தால், நம்மிடம் நகை அதிகம் சேருமா? என்று கேட்டால் அதெல்லாம் ஒன்றுமில்லை என்று சட்டென மறுத்து விடவும் முடியாது என்கிறது ஜோதிடம்.

தங்கம், வெள்ளி போன்ற பொருட்கள்நவ கிரகங்கள் அடங்கியிருக்கும் ஒருஉலோகங் களாக இருக்கின்றன. தங்கம் மகாலட்சுமியையும், குபேரனையும் குறிக்கிறது. வெள்ளி சுக்கிர பகவானை குறிக்கிறது.

எனவே இவைகள் எல்லாம் கனவில் கிடைப்பது போல தோன்றும் பொழுது கிரக மாற்றங்கள் காரணமாக உங்களுடைய வாழ்வியலும் மாறக்கூடிய வாய்ப்புகள் உண்டு என்று சகுன சாஸ்திரம் கூறுகிறது.

திடீரென இது போன்ற தங்கம் வெள்ளிகிடைப்பது கனவாக தோன்றினால் மகா லக்ஷ்மியையும், சுக்கிர பகவானையும் வழிபடுவது உத்தமம்.

வெள்ளிக்கிழமை தோறும் மகாலட்சுமி வழிபாடு செய்யுங்கள். வழிபாட்டில் உங்களிடம் இருக்கும் தங்க நகைகளை மஞ்சள் கலந்த நீரில் வைத்து அதற்கு தூப, தீப ஆராதனை காண்பியுங்கள். அதே போல வெள்ளி நகைகள் அல்லது வெள்ளி பொருட்கள் கிடைத்தால் வெள்ளிக்கிழமைகளில் சுக்கிர பகவானை வெள்ளி நகைகள் அணிவித்து வழிபாடு செய்யுங்கள். இப்படி செய்ய உங்களிடம் திடீர் அதிர்ஷ்டம் வந்து சேரக் கூடிய வாய்ப்புகளும் உண்டு.



# சிவனுக்கு பிரியமான நீர்

# அபிஷேக பொருட்களும் அதனால் தீரும் பிரச்சனையும்




சிவபெருமான் அபிஷேகப் பிரியர் என்பது அனைவருக்கும் தெரியும், இதன் காரண மாகத்தான் சிவலிங்கத்தின் மீது எப்போது தண்ணீர் சொட்டுமாறு, சிவலிங்க அமைப்பிற்கு மேற்புறம் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பி அதில் வில்வ இலைகளை போட்டு, அந்த தண்ணீர் சொட்டு சொட்டாக சிவபெருமான் மீது விழுவது போன்று அமைத்திருப்பார்கள்.

தண்ணீர் என்பது அருவம் மற்றும் உருவம் அமைப்பை பெற்றது. எளிதாக சொல்லப்போனால், இருக்கு ஆனால் இல்லை.

இதை உணர்த்தும் விதமாகத்தான் தண்ணீரை எப்போதும் தன் மீது விழுந்து கொண்டிருப்பதை விரும்பி ஏற்கிறார் சிவ பெருமான்.

நீராவியாக இருக்கும் பொழுது தண்ணீர் அருவம் அது நம் கண்களுக்கு தெரியாது...

ஆனால், அதே தண்ணீரை ஒரு பாத்திரத்தில் நிரப்பி வைக்கும்பொழுது அதன் உருவம் நம் கண்களுக்கு தெரியும்!

தண்ணீர் எவ்வாறு நாம் பிடித்து வைக்கும் பாத்திரத்தின் உருவத்தை எடுத்துக்கொள்கின்ற தோ, அதே உருவம் சிவனிடம் சென்று ஐக்கிய மாவதைப் போன்று சிவபக்தர்கள் சிவனிடம் ஐக்கியமாக வேண்டி துடிப்பார்கள்.

இதனால்தான் சிவனுக்கு அபிஷேகம் செய்தே, அந்த நீரைப்போன்று சிவனிடம் கலக்க வேண்டும் என்பதை காரணமாக வைத்து சிவ னை வழிபடுவார்கள்.

தண்ணீரை எவ்வளவு ஆழமாக சிவபெருமான் ஏற்றுக் கொள்கிறாரோ அதைப்போன்றே ஒருசில பொருட்களை சிவன் விரும்பி ஏற்றுக் கொள்வார்.

அவ்வாறு சிவன் விரும்பி ஏற்கும் ஒருசில பொருட்களைப் பற்றி விரிவாக பார்ப்போம்.

### சிவமந்திரத்துடன் அபிஷேகம்:

சிவமந்திரம் சிவபுராணத்தில் சிவபெரு மானுக்கு அவரின் துதிபாடும் மந்திரங்கள் பிடிக்குமென கூறப்பட்டுள்ளது.

அதன்படி ஒரு வெண்கல பாத்திரத்தில்




சுத்தமான தண்ணீரை எடுத்துக்கொண்டு சிவ மந்திரங்களை கூறிக்கொண்டே சிவனுக்கு அபிஷேகம் செய்வது அவருடைய உக்கிரத்தை அணைப்பதோடு நம் வாழ்விலும் அமைதியை கொண்டுவரும்.

### வறுமை போக்கும் சர்க்கரை:

ஈசனுக்கோ சர்க்கரை என்றால் கொள்ளைப் பிரியம். சிவபெருமானுக்கு ருத்ர அபிஷேகம் நடக்கும்போதோ அல்லது சிவராத்திரி பூஜையின் போதோ சர்க்கரையை வைத்து வழிபட்டால் உங்கள் வாழ்க்கையில் உள்ள வறுமை பனி போல விலகும்.

### அதிர்ஷ்டம் தரும் குங்குமப்பூ:

குங்குமப்பூ சிவனுக்கு மிகவும் பிடித்த பொருள் என்பது பலரும் அறியாத ஒன்று. குங்குமப்பூவை கொண்டு சிவனை வழிபடுவது உங்கள் வாழ்வில் செல்வத்தையும், அதிர்ஷ்டத்தையும் அள்ளித்தரும்.

### இலட்சியத்திற்கு உதவும் பன்னீர்:

சிவபுராணத்தின் படி ஈசனுக்கு பன்னீர் அபிஷேகம் செய்வதோ அல்லது பன்னீர் வைத்து வழிபடுவதோ சிவபெருமானை குளிர்விக்கும். அதோடு தூய்மையையும் பரப்பும். மேலும் இவ்வாறு வழிபடுவது பக்தர்களுக்கு அவர்கள் வாழ்க்கையின் இலட்சியத்தில் கவனம் செலுத்த உதவுவதோடு அதனை அடையவும் அருள்புரியும்.

### வெற்றி தரும் பசு நெய்

சிவனுக்கு சுத்தமான பசும்பாலில் இருந்து தயாரிக்கப்பட்ட நெய்யால் மட்டுமே வழிபடவேண்டும். பசு நெய் வாழ்வில் வெற்றி, வலிமை தரும்.

### துரதிர்ஷ்டத்தை போக்கும் தயிர்

தயிர் அனைத்து தெய்வங்களுக்கும் பிடித்தது என்றாலும் சிவபெருமானுக்கு தயிர் வைத்து வழிபடுவதில் கூடுதல் சிறப்புகள் உள்ளது. வாழ் வில் அமைதியையும், பொறுப்பையும் வழங்கும் அதுமட்டுமின்றி துரதிர்ஷ்டத்தை உங்கள் வாழ்க் கையை விட்டு துரத்தும்.

### அங்கீகாரம் தரும் சந்தனம்

வேதங்களின் கூற்றுப்படி சந்தனம்தான் சிவனுக்கு மிகவும் பிடித்த பொருள் இது எந்த அளவிற்கு குளிர்ச்சியாக உள்ளதோ அந்த அளவிற்கு ஈசனின் கோபத்தையும் தணிக்கும். எனவே சிவலிங்கத்தை சந்தனம் கொண்டு அலங்கரிப்பது சிவனின் அன்பை பெறுவதற்கான எளிய வழியாகும். இது சமூகத்தில் உங்களுக்கான பெயர் மற்றும் அங்கீகாரத்தை பெற்றுத்தரும்.

### தீயவற்றை அழிக்கும் வில்வ இலை

வில்வ இலை இது சிவவழிபாட்டிற்காகவே படைக்கப்பட்ட ஒன்றாகும். ஏனெனில் மலர்களை காட்டிலும் இந்த இலைகளே ஈசனுக்கு மிகவும் பிடித்தது. இதனை வைத்து வழிபடுவது உங்கள் வாழ்வில் உள்ள எதிர்மறை மற்றும் தீய சக்திகளை விரட்டுவதோடு உங்கள் துன்பங்களுக்கு ஒரு முடிவை கொண்டுவரும்.

### நற்குணம் தரும் தேன்

இயற்கையின் மிகவும் தூய்மையான படைப்புகளில் ஒன்று தேன். எனவே இது சிவ பெருமானுக்கு படைக்க ஏற்ற ஒன்றாகும். தேனை வைத்து வழிபடுவது ஒருவரின் குணத்தை நல்லதாக மாற்றுவதோடு வாழ்வில் இனிமையையும் சேர்க்கும்.



கீதா–ராஜன்

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

# காயத்திரி மந்திரத்திரமும் தனித்துவமான சக்தியும்

## மன சுத்தியுடன் எப்போது வேண்டுமானாலும் சொல்லலாம்

காயத்தி மந்திரம் என்பது மிகப்பெரிய சக்தி உள்ள, அனைத்து யுகத்திலும், அதற்குரிய பல னை குறைத்துக் கொள்ளாமல், நற்பலனையே தரும் ஒரு இணையற்ற மந்திரமாகும்.

இறைவனுக்கு செய்யும் பூஜையின் போது மட்டுமே காயத்திரி மந்திரத்தை பயன்படுத்த வேண்டுமென்பது கிடையாது.

இறைவனுக்கு படைக்கும் உணவைதயாரிக் கும்போதும், இறை பூஜை செய்ய தயா ராகும் சமயத்தில் பூஜைக்குரிய வேலைகளை செய்யும்போதும் இந்த காயத்திரி மந்திரத்தை கூறிக்கொண்டே இறை பணியில் ஈடுபடும்போது அந்த இறை பணிக்கு அதீத சக்தி கிடைக்கும்.




குறிப்பாக இறை பிரசாத மான, விபூதி, தீர்த்தம், சந்தனம், குங்குமம் போன்ற வற்றை பயன்படுத்தும் போதும், அவற்றை தயாரிக்கும் போதும் காயத்திரி மந்திரத்தை மன தார கூறிக்கொண்டே, தயா ரிப்பது, பயன்படுத்துவதுபோன்றவற் றை செய்யும்போது அந்த பொருட்களுக்கு தனிப்பட்ட சக்தி கிடைத்துவிடும்.

இந்த காயத்திரி மந்திரம் குறித்த ஒரு சிறு கதையைப்பார்ப் போம்.

பூணூலுக்கு வடமொழியில்யக் ஞோபவீதம் என்றபெயர். அப்படிப் பட்ட பூணூலைத் தயாரிக்கையில்



காயத்ரி மந்திரத்தை ஜபித்துக்கொண்டே தயாரிப்பார்களாம்.

அப்படி ஜபித்து ஜபித்து உரு ஏற்றப்பட்ட பூணூலுக்கு சக்தி அதிகம்.

ஒரு ஏழை பிராமணர் பூணூல் தயாரித்துக் கொடுத்து அதில் வரும் சொற்ப வருமானத்தில் வாழ்க்கையை எப்படியோ ஓட்டி வந்தார். கொடுத்தவர்கள் அவர் வாழ்க்கையை நடத்தத் தேவை யான பொருளைக் கொடுப்பார்கள். மிகவும் சொற்பமான தொகை மட்டுமே கிடைத்து வந்ததால் அவர் ஏழையாக வே இருந்தார்.

அவரும் திருமணமாகி ஒரு பெண்மகவைப் பெற் றெடுத்தார்.

ஆனாலும் பூணூல் தயாரிப்பும் அதைக் கொண்டு வாழ்க்கை நடத்துவதும் நிற்கவில்லை.

அந்த ஊர் அரசன் மிகவும் சத்தியவான்.சொன் னால் சொன்னபடி அனைவருக்கும் செய்வான். அரசன் நல்லவனாக இருந்ததால் ஊர் மக்களும் பிராமணருக்கு ஓரளவு உதவி வந்தனர்.

பிராமணரின் பெண்ணிற்குத் திருமண வயது வந்துவிட்டது. பெண்ணிற்கு வரனும் அமைந்தது.

ஆனால் அந்தக் கல்யாணத்தைக் குறைந்த பக்ஷமான செலவுகளோடு நடத்தியாக வேண் டுமே, என்ன செய்யலாம்?

காயத்ரியை ஒருமனதாக வாய் ஜபிக்க பிராமணர் எந்தக் கவலையும் இல்லாமல் இருக்க அப்படியே மனையாளும் இருப்பாளா?

அவள் பெண்ணின் திருமணத்திற்காகப் பொருள் தேடும்படி பிராமணரைத் தூண்டி விட, அவரும் செய்வதறியாது மன்னனிடம் சென்றார்.

மன்னனும் பிராமணரை வரவேற்று உப சரித் தான்.

அவர் முகத்தின் ஒளி அவனைக் கவர்ந்தது.

இது எதனால் என யோசித்துக்கொண்டே அவர் வந்த காரியம் என்னவோ என வினவினான்.

www.aanmeegamalar.com

பிராமணரும் தன் மகளுக்குத் திருமணம் நிச்சயித் திருப்பதாகவும், அதற்கான பொருள் தேவை என்பதாலேயே மன்னனிடம் வந்திருப்ப தாகவும் கூறினார்.

அவ்வளவு தானே!

நான் தருகிறேன் என்ற மன்னன் எவ்வளவு பொருள் தேவை எனக் கேட்க, கூசிக் குறுகிய பிராமணரோ, தன்னிடமிருந்த பூணூலைக் காட்டி," இதன் எடைக்குரிய பொற்காசைக் கொடுத்தால் போதும்; ஒருமாதிரி சமாளித்துக் கொள்கிறேன்." என்று கூறினார்.

மன்னன் நகைத்தான்.

ஒரு தராசை எடுத்துவரச் சொல்லிப் பூணூலை அதில் இட்டு மறுபக்கம் சில பொற்காசுகளை வைக்கச் சொன்னான்.

பூணூல் இருக்கும் பக்கம் தராசுத்தட்டு தாழ்ந்தே இருந்தது.

மேலும் பொற்காசுகளை வைக்க ம்ஹூம்..அப்படியும்

பூணூல் இருக்கும் தட்டு தாழ்ந்தே இருந்தது. தராசும் பத்தவில்லை.

பெரிய தராசைக் கொண்டு வரச் செய்தான் மன்னன்.

மேலும் பொற்கட்டிகள், வெள்ளிக்கட்டிகள், நகைகள், ரத்தினங்கள் என இட இட தராசுத்தட்டு தாழ்ந்தே போக, தன் கஜானாவே காலி யாகுமோ என பயந்த மன்னன் மந்திரியைப் பார்த்தான்.

சமயோசிதமான மந்திரியோ, "பிராமணரே, இன்று போய் நாளை வந்து வேண்டிய பொருளைப் பெற்றுக்கொள்ளும்.

நாளை வருகையில் புதிய பூணூலைச் செய்து எடுத்துவரவும்." எனக் கூறினார்.

கலக்கத்துடன் சென்றார் பிராமணர்.

இத்தனை நாட்களாக மனதில் இருந்த அமைதியும், நிம்மதியும் தொலைந்தே போனது.

மன்னன் பொருள் தருவானா மாட்டானா?

ஆஹா, எத்தனை எத்தனை நவரத்தினங்கள்?

அத்தனையையும் வைத்தும் தராசுத்தட்டு சமமாகவில்லையே?

நாளை அத்தனையையும் நமக்கே கொடுத்து விடுவானோ?

அல்லது இன்னமும் கூடக் கிடைக்குமா?

குறைத்துவிடுவானோ?

பெண்ணிற்குக் கொடுத்தது போக நமக்கும் கொஞ்சம் மிஞ்சும் அல்லவா?

அதை வைத்து என்ன என்ன செய்யலாம்?

பிராமணரின் மனம் அலை பாய்ந்தது.

அன்றிரவெல்லாம் தூக்கமே இல்லை.

காலை எழுந்ததும், அவசரம், அவசரமாக நித்ய கர்மாநுஷ்டானங்களை முடித்தார்.

பூணூலைச் செய்ய ஆரம்பித்தார்.

வாய் என்னவோ வழக்கப்படி காயத்ரியை ஜபித்தாலும் மனம் அதில் பூர்ணமாக ஈடுபடவில்லை.

தடுமாறினார்.

ஒருமாதிரியாகப் பூணூலைச் செய்து முடித்தவர் அதை எடுத்துக்கொண்டு மன்னனைக் காண விரைந்தார்.

அரசவையில் மன்னன், மந்திரிமார்கள் வீற்றிருக்க மீண்டும் தராசு கொண்டு வரப்பட்டது.

அன்று அவர் தயாரித்த பூணூலை தராசுத் தட்டில் இட்டு இன்னொரு தட்டில் சில பொற்காசுகளை வைக்கச் சொன்னான் மன்னன்.

என்ன ஆச்சரியம்?

பொற்காசுகள் இருக்கும் தட்டு தாழ்ந்து விட்டதே?

சில பொற்காசுகளை எடுத்துவிட்டு இரண்டு,




மூன்று பொற்காசுகளை வைத்தாலும் தட்டுத் தாழ்ந்து போயிற்று.

பின்னர் அவற்றையும் எடுத்துவிட்டு ஒரே ஒரு பொற்காசை வைக்கத் தட்டுச் சமம் ஆயிற்று.

அதை வாங்கிக் கொண்டார் அந்த பிராமணர்.

பிராமணர் அங்கிருந்து சென்றதும் மன்னனுக்கு ஆச்சரியம் அதிகமாக மந்திரியிடம், "முதலில் எவ்வளவு பொருளை வைத்தாலும் தாழாத தட்டு இன்று சில பொற்காசுகளை வைத்ததுமே தாழ்ந்தது ஏன்?" என்று கேட்க, மந்திரியோ, "மன்னா, இந்த பிராமணர் உண்மையில் மிக நல்லவரே.

சாதுவும் கூட, இத்தனை நாட்கள் பணத்தாசை ஏதும் இல்லாமல் இருந்தார். தேவைக்காகத் தான் உங்களை நாடி வந்தார். வந்தபோது அவர் கொடுத்த பூணூல் அவர் ஜபித்த காயத்ரியின் மகிமையால் அதிக எடை கொண்டு தனக்கு நிகரில்லாமல் இருந்தது.

அந்தப் பூணூலை வைத்திருந்தால் ஒருவேளை உங்கள் நாட்டையே கூடக் கொடுக்க வேண்டி இருந்திருக்கலாம்; அவ்வளவு சக்தி வாய்ந்தது காயத்ரி மந்திரம்.

ஆனால் அவரைத் திரும்ப வரச் சொன்ன போது, அவர் பணம் கிடைக்குமா, பொருள் கிடைக்குமா என்ற கவலையில் காயத்ரியை மனம் ஒருமித்துச் சொல்லவில்லை. ஆகவே மறுநாள் அவர் கொண்டு வந்த பூணூலில் மகிமை ஏதும் இல்லை.

அதனால் தான் பொற்காசுகளை வைத்ததுமே தட்டுத் தாழ்ந்துவிட்டது." என்றான் மந்திரி.

தூய மனதுடன் ஜபிக்கும் காயத்ரி மந்திரத்திற்கு எவ்வளவு சக்தி உள்ளது என்பதை இந்த சம்பவம் உணர்த்தினாலும், மனதிற்குள் ஒரு சிறு சஞ்சம் எவ்வளவு பெரிய பாதிப்பை மக்கள் வாழ்க்கையில் உண்டாக்கிவிட்டது என்பதையும் விரிவாக கூறுகிறது.

# சூரியனை மையமாக வைத்து தமிழர்கள் கொண்டாடிய பண்டிகைகள்



www.aanmeegamalar.com

சூரியன் மிகத் துல்லியமாக கிழக்கில் உதிக்கும் நாள் தான் சித்திரை 1, எனவேதான்..

தமிழர்கள் சித்திரை 1 புத்தாண்டாக கொண்டாடினர்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் துல்லியமாக கணித்து கூறிய வானியல் சாஸ்திரம், இந்து சமயம் சொல்லி வைத்த நமக்குத் தெரியாத உண்மைகள்.

சித்திரை.................................
ஆடி.......................................
ஐப்பசி...................................
தை.......................................

1

இவற்றை எல்லாம் விழாவாக நாம் கொண்டாடுறது ஏதோ ஒரு சடங்கு, பழக்கம் என்று கடமைக்காக அவற்றை கடைபிடித்து வருகிறோம்.

நம் முன்னோர்கள் இதற்குப் பின் மிகப்பெரிய அறிவியலை வைத்திருக்கிறார்கள். என்பது இக்கால சந்ததியினருக்கு தெரிவதில்லை...!

"சூரியன் உதிக்கும் திசை கிழக்கு" என்று

www.aanmeegamalar.com

முன்னோர்கள் கூறியதை, என்றாவது ஒருநாள் ஆராய்ந்து பார்த்திருக்கிறோமா? சிறு அளவை வைத்து சூரியன் உதிக்கின்ற போது சோதித்து இருக்கிறோமா? என்றால்இ கண்டிப்பாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

நம்மை அடிமைப்படுத்த வெள்ளையன் முதலில் போரில் ஈடுபடவில்லை, அதற்கு மாறாக நாகரீகம் என்ற போர்வையில், நம் மக்களை ஏளனமாக பேசி, நமது கலாச்சாரம், பழக்கவழக்கங்களை கேலியும் கிண்டலும் செய்து, அவற்றை கடைபிடித்து வந்த நம் மக்களை முட்டாளாக்கி, நாகரீகம் என்ற பெயரில் அவன் கடைபிடித்த ஒருசில குப்பைகளை நமது தலையில் கட்டிவிட்டு, நமது கலாச்சாரத்தின் பலன்களை அறிந்து அவற்றை அவன் திருடிச் சென்றுவிட்டான்.

குறிப்பாக வெள்ளையர்கள் நமது அறிவியலை அழித்துவிட்டு, ஒரு முட்டாள் தனமான கல்வியை புகுத்தி விட்டான் என்பது இன்று வெளிப்படையாக நாம் அறிந்து கொள்ளும் வகையில் உள்ளது.

இன்றைய நவீன நாகரீகத்தில், விஞ் ஞானத்தில் கூட சூரியனைப் பற்றிய ஆராய்ச்சியில் ஒரு சதவீதத்தை கூட கடக்க முடியாமதல் விஞ்ஞானிகள் தினறுகின்றனர்.

ஆனால், பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே நமது முன்னோர்கள், குறிப்பாக நமது தமிழர்கள் சூரியனைப் பற்றிய ஆராய்ந்து அதில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

அதில், சூரியன் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டுமே சரியாக கிழக்கே உதிக்கும்..!!

பின்னர் கொஞ்சம் கொஞ்சமா வடகிழக்கு நோக்கி நகர்ந்து, ஒரு குறிப்பிட்ட புள்ளியில் மறுபடியும் தெற்கு நோக்கி திரும்பும்...

அதன் பின் மறுபடியும் ஒரு நாள் கிழக்கே உதிக்கும், அதன்பின் தென்கிழக்கு நோக்கி நகரும்...

இப்படி சரியாக கிழக்கில் ஆரம்பித்து, வடகிழக்கு, தென்கிழக்கு என்று சென்று மறுபடியும் கிழக்குக்கு வர ஆகிற நேரம் சரியாக ஒரு வருடம்..!!

சரி... இதுக்கும் தமிழ் மாதத்திற்கும் என்ன சம்பந்தம்?

சூரியன் தன் பயணத்தை கிழக்கில் ஆரம்பிக்கும் நாள் தான் "சித்திரை 1". தமிழ் புத்தாண்டு. (In science it is called Equinox)

அதன்பின், சரியாக வடகிழக்கு புள்ளி தான் "ஆடி 1".ஆடி பிறப்பு. (solstice)

மறுபடியும் கிழக்குக்கு வரும்போது "ஐப்பசி 1". தீபாவளி.(equinox)

மீண்டும் சரியாக தென்கிழக்கு இப்போது "தை1". பொங்கல். (solistice)

இந்த வானியல் மாற்றங்களையும், அதனை சார்ந்த பருவ கால மாற்றங்களையும் நன்கு உணர்ந்து இருந்த நம் முன்னோர்கள், இவற்றை அனைவரும் அறியும் வகையில் தான் திருவிழாக்களாக கொண்டாடினார்கள்...

சித்திரை (vernal equinox) .......புத்தாண்டு
ஆடி 18 (summer solstice) .....ஆடிப்பிறப்பு
ஐப்பசி (autumn equinox)............தீபாவளி
தை 1 (winter solstice)...............பொங்கல்

இதனால்தான் மேற்கண்ட விழாக்கள் அனைத்தும் சூரியனை மையமாக வைத்துக் கொண்டாடப்படுகிறது.



# தெரியாத, புரியாத, ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக தொகுத்து பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் நமது இதழில் வெளியிட்டு வருகிறோம்...**

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD

இதுவரை வெளிவந்த

**130** க்கும் மேற்பட்ட

**இதழ்களை**

**aanmeegamalar.com**

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**







# தீ ஜுவாலையும் வாடாத மலரும்

# அம்மன் சக்தியை கூறும் நிகழ்வு

ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன் அருப்புக்கோட்டை நகரின் மேற்குப்பகுதியான பாவடித்தோப்பு என்னுமிடத்தில், இங்கு வசித்த நெசவாளர்கள் அன்னை மாரியம்மனுக்கு ஒரு கோயில் எழுப்பினார்கள்.

தங்கள் வாழ்வாதாரம் செழித்து உண்ண உணவும், உடுக்க ஆடையும், இருக்க வசிப்பிடமும் குறைவறத் தந்தருளும் தாயாம் தெப்பக்குள ஆயிரங்கண் மாரியம்மனுக்கு ஆண்டு முழுக்க பல்வேறு விழாக்களை எடுத்து அவர்கள் கொண்டாடி மகிழ்ந்தனர்.

அவற்றில் சித்திரை மாதம் நடைபெறும் பொங்கல் திருவிழாவே ஏனைய திருவிழாக்களுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் அமைந்துள்ளது.

வடக்கு நோக்கிய வண்ணம் இத்திருக்கோயில் கட்டப்பட்டுள்ளது. கோயிலின் பின்பக்கம் பிரம்மாண்டமான தெப்பக்குளம் அமைந்துள்ளது. இதனாலேயே இந்த அம்மனின் திருநாமம் அருள்மிகு தெப்பக்குள ஆயிரங்கண் மாரியம்மன் என வழங்கப்படுகிறது.

கோயிலின் முன்புறம் பலிபீடம், கொடிக்கம்பம், சிம்ம வாகனம் ஆகியவை வரிசையாய் அமைந்துள்ளன. இதனையடுத்து விசாலமான, கலை நயமிக்க முக மண்டபம் காணப்படுகிறது. அடுத்து மகாமண்டபமும், தொடர்ந்து அர்த்த மண்டபமும், கருவறையும் எழிலாக அமைந்துள்ளன. மூலவராக நின்ற கோலத்தில் சாந்த சொரூபியாக திரிசூலம் ஏந்தியவண்ணம் அம்பிகை மாரியம்மன் காட்சி அளிக்கிறாள். அவளுக்கு இடப்புறம் விநாயகர் பீடம் ஒன்று உள்ளது. சித்திரைப் பொங்கல்

மாதந்தோறும் கடைசி வெள்ளியில்குத்து விளக்கு பூசை, மார்கழி தனுர் பூசை, தைப்பொங்கல், நவராத்திரி என பல்வேறு விழாக்கள் வெகு விமரிசையாக இத்தலத்தில் ஆண்டு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆனாலும் சித்திரை மாதத்தில் நடைபெறும் விழாவே வெகு






விமரிசையாக இங்கு நடந்துவருவது குறிப்பிடத் தக்கது.

சித்திரைப் பொங்கல் விழா பன்னிரெண்டு நாள் உற்சவமாகக் கொண்டாடப்படுகிறது. கொடியேற்ற நிகழ்ச்சியுடன் விழா இனிதே தொடங்குகிறது. தினந்தோறும் மாலையில் கோயில் கலையரங்கில் சமயம் தொடர்பான பல்சுவை நிகழ்ச்சிகள் நடை பெறும். தினமும் உற்சவர் புறப்பாடாகி வீதியுலா எழுந்தருளும் வைபவமும் நடைபெறும். எட்டாம் திருவிழாவை ஒட்டி அன்று மாலையில் கோயில் முன்பாக பொங்கல் வைத்து வழிபடும் நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கன பெண்கள் கலந்துகொள்வர்.

அன்றையதினம் சரியாக நள்ளிரவில் ஆயிரங்கண் மாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் தொடங்கும். புது வஸ்திரம் உடுத்தி, அலங்காரங்களும் ஆபரணங்களும் சாத்தி அம்மனை எழில் கோலமாக்கி, நைவேத்திய படையலும் இட்டு, தூப தீபம் காட்டி முடித்து, அர்த்த மண்டபக் கதவை அடைத்துவிடுவார்கள். அதனைத் தொடர்ந்து கோயில் பூசாரி வேப்பிலையைக் கையில் ஏந்தியபடி, அம்மனை மனதார வேண்டிக்கொண்டே உள்பிராகாரத்தை ஒருமுறை ஆத்மார்த்தமாக வலம் வருவார்.

அம்மனை மனதில் வேண்டி வருந்திக்கையி லுள்ள தேங்காயை அர்த்தமண்டப வாசல்படியில் சிதறுகாய் உடைப்பார்.

அந்தவேளையில் கோயிலைச் சுற்றிக்கூடி நிற்கும் ஆயிரக்கணக்கான மக்க ளின் நெஞ்சமெல்லாம் அம்மனின் நினைவைப் போற்றியபடி அவளின் பெருமைகளைப் பாடியபடி அர்த்த மண்டபக் கதவுகளையே வைத்த கண் மாறாமல் பார்த்திருக்கஅந்த தெய்வீகக் காட்சி ஒரு கண் கொள்ளாக் காட்சியாக ஒரு நொடிப் பொழுதில் நம் கண் முன்னே நிஜமாய் நடந்துமுடியும். தெய்வ தரிசனம்.


புனிதவேல்

அதாவது பூசாரி சிதறுகாய் போட்டு உடைத்த மறுவிநாடியே, சாத்திவைக்கப்பட்டிருக்கும் அர்த்த மண்டபக் கதவுகள் இரண்டும் தானாகத் திறந்து அந்த ஆயிரங்கண் மாரித்தாயின் காணுதற்கரிய அதிஅற்புத தெய்வீக தரிசனக் காட்சி அந்நேரம் அங்கே கூடிநிற்கும் மக்களுக்கு ஆனந்த வரப்பிரசாதமாகக் காணக் கிடைக்கும். ஒன்பதாம் திருவிழா அன்று பூக்குழி இறங்கும் நிகழ்ச்சியும், அக்கினிச் சட்டி ஏந்தி நேர்த்திக்கடன் செலுத்தும் நிகழ்ச்சியும் நடக்கும்.

## வாடாத மல்லிகை

இருள் கவியத் தொடங்கியதும் கோயில் முன்பாக இரண்டு ஆள் உயரத்துக்கு அடுக்கப் பட்ட பல டன் விறகுகள் தீ மூட்டப்படும். மேலும் மேலும் விறகுக் கட்டைகளைப் போட்டுக் கொண்டே இருப்பர். அம்மனுக்கு நேர்ந்துகொண்ட பக்தர்கள் இப்பூக்குழியில் இறங்கி நடப்பர். இதற்குமுன் மல்லிகைச் சரங்களைப் பூக்குழிக்கு நான்கு பக்கங்களிலும் எல்லைக்கோடாகபோட்டுவைப்பர். அது தீ ஜுவாலையினால் வாடாமல், கருகாமல் புதுமலர்போலவே மணம் வீசியபடியிருக்கும்.

அம்மன் பூக்குழியை பார்வையிட்ட பின்னரே மல்லிகைச் சரங்கள் வாடும். பத்தாம்நாள் விழாவையொட்டி அம்மன் வீதியுலா நிகழ்ச்சி நடைபெறும். அச்சமயம் பக்தர்கள் வடம்பிடித்து தேர் இழுப்பர். பதினொன்றாம் நாள் புஷ்பப் பல்லக்கு நிகழ்ச்சியும் வாண வேடிக்கையும் முளைப்பாரியும் நடைபெறும்.

ஆதியில் இத்திருக்கோயில் அமைந்த இடம் இடுகாடாக இருந்தது; எனவே, பல சித்தர்கள் இங்கு ஜீவசமாதி அடைந்துள்ளனர்.

அக்காரணத்தினால் இத்திருக் கோயில் மிக்க சாந்நித்தியத்துடன் திகழும். அம்பிகை சாந்தசொரூபி யாகத் திகழ்வதால் இங்கு உயிர்ப்பலி இடுதல் வழக்கம் இல்லை. மாறாக இங்கு திரளும் பக்தர்களுக்கு அன்ன தானமே வழங்கப்படுகிறது.

தொகுப்பு: புனிதவேல்

தொடர்பு எண்: 9841807572






# சிவாலயங்களும் ஆமையும்

பெரும்பாலும் வடநாட்டில் உள்ள சிவாலங்களில் கருவறையில் உள்ள இறைவன் திருமேனியை நோக்கியவாறு ஆமையின் திருமேனி இருக்கும்!!

தற்போது தென்இந்தியாவில் சில சிவாலயங் களில் ஆமையின் திருமேனியோ, படமோ இடம் பெற்று இருக்கும், இதன் முழு உள் அர்த்தம் என்ன என்பதை அறிவோம்.

மனிதர்கள் தாங்கள் சுமக்கும் கருவை தன் னுள்ளே வைத்திருந்து தங்கள் காணும் காட்சி, அனுபவிக்கும் இன்பம், போன்ற உணர்வுகள் வழியே உயிர்பெற செய்வார்கள்!

கோழி முட்டையிட்டு தன் ஸ்பரிசம் தீண்டல் வழியே தன் உடலின் சூட்டை கொண்டு அந்த முட்டையில் உள்ள கருவை உயிர்பெற செய்யும்!

அதேபோல... மீன் தான் முட்டையிட்டு தன் கண்கள் வழியே அந்த முட்டையை பார்த்துக் கொண்டே தன் பார்வையின் வழியே முட்டையை உயிர்பெற செய்யும் !!

ஆனால், ஆமை கொஞ்சம் வித்தியாசமானது, அது கட லில் இருந்து வெளியே வந்து கடற்கரை யில் தன் முட்டைகளை இட்டுவிட்டு அதை மணல் கொண்டு மூடிவிட்டு, உடனே கடலுக்குள் சென்றுவிடும்!




அதன் அன்றாட வாழ்வை, பயணத்தை மேற் கொண்டு இருக்கும், ஆனால் அதன் சிந்தை அந்த முட்டைகள் மீதே இருக்கும், அது எத்தனை கடல் கடந்து இருந்தாலும் அதன் சிந்தனை அந்த முட்டைகள் மீதே இருக்கும்!

இந்த சிந்தை என்ற எண்ணம் எங்கோ இருக்கும் அந்த முட்டைகள் மீது ஓர் தாயின் அரவணைப்பை கொடுத்து அந்த முட்டை களை உயிர் பெற செய்யும்!

அதுபோலவே....

நம் இறைவனின் படைப்புகள், நாம் எங்கு இருந்தாலும், எப்படி இருந் தாலும் என்ன செய்து கொண்டு இருந்தாலும் நம்மை படைத்த இறைவன் எப்போதும் இடை விடாது நம்மை நோக்கி கொண்டே இருக்கிறான்!

அவன் எங்கும் நிறைந்து எப்போதும் நம் மீது நமக்கே இல்லாத அக்கறையோடு காத்தருளி கொண்டு இருக்கிறான் இதை உணர்த்தவே!

ஆமையை கொண்டு நமக்கு அறி வுறுத்துகிறார்கள் நாம் முன்னோர்கள்.

# அடுத்தவனை பார்த்து ஏங்காதே,
# தாழ்வு மனப்பான்மை வரும்
# அடுத்தவரை ஏளனமாய் பார்க்காதே,
# தலைக்கனம் பெருகிவரும்




**உணவை தான் சாப்பிட்டேன்**
**எப்படி மலம் ஆனது?**
**உயிரோடு தானே இருந்தேன்**
**எப்படி இறந்து போனேன்?**
**மலம் தான் உணவாக இருந்ததா?**
**மரணம் தான் வாழ்வாய் இருந்ததா?**
**இந்த சுருங்கி போன உடம்புதான்**
**இதுவரை இளமையை அனுபவித்ததா?**
**இந்த சுருங்கும் மார்புகளுக்கா**
**இத்தனைக் கண்கள் வட்டமிட்டது?**
**பெருத்தன சிறுக்கும்,**
**சிறுத்தன பெருக்கும் என்று பாடியது**
**இந்த நிலையற்ற பொய் வாழ்வைத்தானா?**

இன்னும் இழுத்து கொண்டு இருக்கிறான். செத்து தொலைய வில்லையே என்று மனைவியும் சுற்றமும் பேசிய போது, என்னை நூறாண்டு வாழ்க! என வாழ்த்தியது நினைவுக்கு வந்தது.

இதுவரை எனது கோடாரியால் நான் எனது வேரையல்லவா வெட்டியிருக்கிறேன். நான் விரும்பியவை எல்லாம் என்னை வெறுத்து கொண்டிருக்கின்றன. இளமையாய் இருக்கும்போதே முதுமையை பழகி இருக்கவேண்டும். அறுசுவை உணவை தேடி தேடி உண்ணும் போதே அது மலமாகும் என்று உணர்ந்திருந்தால், அடுத்தவர் உணவை நான் பறித்திருக்கமாட்டேன்.

அனைவருக்கும் பயன்படவேண்டிய பொன் பொருளை ஒரு

திருடனைப்போல் பதுக்கி இருக்கமாட்டேன். காலம் கடந்த ஞானம். பாயும், நோயும் தவிர யார் துணை வரப்போகிறார்கள். இறந் தாலும் எனக்காக யார் அழப் போகிறார்கள்?

பிணமானப்பின் இந்த மாளிகையும் பணமும்என தென்று நான் சொந்தம் கொண்டாடவா முடியும் சந்தனத்தால் மணந்த உடல் என்றாலும் இறந்தால் மணக் கவாப் போகிறது? கண்ணே மணியே என்று கொஞ் சிய தாயும், என் உயிரே என்று சொன்ன மனைவியும் பிணமானபின் உடன் வரப் போகிறார்களா?

பிரியமாட்டேன் என்று சொன்னவர்கள் பிணம் என்று வீசி சென்றப் பிறகு, மண் என்னைப்பார்த்து, "மகனே! நானிருக்கிறேன். என் மடியில் வந்து உறங்கு" என்று என்னை மார்போடு தழுவிக்கொண்டது.

## அருந்தின மலமாம் பொருந்தின அழுக்காம் வெறுப்பன உவப்பாம் உவப்பன வெறுப்பாம் உலகே பொய் வாழ்க்கை.

அருந்தின மலமாம் பொருந்தின அழுக்காம் வெறுப்பன உவப்பாம் உவப்பன வெறுப்பாம் உலகே பொய் வாழ்க்கை.

நீ நீயாக இரு... உங்கள் உடலில் இருக்கும் ஒவ்வொரு உறுப்பும் நீங்கள் உயிருடன் இருக் கும் அத்தனை நாளும் பயன்படுத்தவே படைக் கப்பட்டிருக்கிறது. வயதானால் அந்த நோய் வரும், இந்த நோய் வரும் என்று சொன்னால் தயவு செய்து நம்பாதீர்கள்.

உங்கள் கூடவே வாழும் மிருகங்களைப் பாருங்கள். மரணம் வரும் வரை தன் வேலைகளைத் தானே செய்து கொள்கிறது. எந்தப் பறவைகளும் தனக்கு வயதாகி விட்டது என்று தன் குஞ்சிடம் உணவு கேட்பதில்லை. எந்த மாடும் படுத்து கொண்டு தன் கன்றிடம் தண்ணீரோ, உணவோ கேட்பதில்லை. எந்தப் பூனையோ, நாயோ படுக் கையில் இருந்து கொண்டு மலம் கழிப்பதில்லை. மரணம் அடையும் நாள் வரை ஆரோக் கியமாக சுயமாக தன் வேலைகள் அனைத்தையும் செய்து கொள்கின்றன.

மனிதர்கள் மட்டும் தான் வயதானால் நோய்வரும், இய லாமை வரும் என்று நம்பி அடுத்தவர்களை எதிர்பார்த்து வாழ ஆரம்பிக்கிறார்கள். நன்கு ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். முதுமை என்று எதுவும் இல்லை. நோய் என்று எதுவும் இல்லை. இயலாமை என்று எதுவுமில்லை. எல்லாம்உங்கள் மனதிலும், அதன் நம்பிக்கையிலும் தான் இருக்கிறது. சிந்தனையை மாற்றுங்கள். ஆரோக்கியமாக வாழுங்கள். நீங்கள்எதை நம்பு கிறீர்களோ அதுவாகவே ஆகிப் போகிறீர்கள்.

உனக்கு மேலே உள்ளவனைப் பார்த்து ஏங் காதே, தாழ்வு மனப்பான்மை வரும். உனக்கு கீழே உள்ளவனை ஏளனமாய் பார்க்காதே, தலைக்கனம் வரும்.



# தேவாரப்பாடலில் குறிப்பிடப்பட்ட ஊரும் அவ்வூரில் குடியிருக்கும் சிவபெருமானும்

சிவன் என்பது பிம்பம்.இந்த உலக இயக்கங்கள்,ஜீவராசிகள்,மனிதர்கள் என அனைத்தும் ஈசனின் பிரதி பிம்பம்.கோள்களையும்,அவை சுற்றி வரும் பாதையையும் நிலை நிறுத்துவது சிவம் என்னும் ஆற்றலே ஆகும்.பஞ்சபூதங்களும் இயங்கிட அவற்றுக்கு ஆற்றலையும் அதிகாரத்தையும் அளிப்பவர் சிவபெருமானே.பஞ்சபூதங்களைக் கொண்டே பரமன் இந்தப் பாரினை இயக்குகிறார். இந்த பாரத தேசத்தில் சிவபெருமான் மூலவராக கோயில் கொண்டருளும் எத்தனையோ தலங்களுள் செலம்பராயம்பாளையம் தலமும் ஒன்று. சுமார் 500 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான தலம்.பழங்காலத்தில் சிலம்பரையன்பாளையம் என்றழைக்கப்பட்ட இந்தப் பகுதி தற்போது மருவி செலம்பராயம்பாளையம் என வழங்கப்படுகிறது.

இத்தலம் பாடல் பாடப்பெற்ற தலம் இல்லையென்றாலும் திருநாவுக்கரசர் இயற்றிய தேவாரப் பாடலில் "ஈசனையெவ் வுலகினுக்கும் இறைவன் தன்னை" என துவங்கும் பாடலில் நான்காவது வரிசையில் “சிலம்பரையன் பொற்பாவை” என்ற வரிகள் இருக்கும். இந்தப் பாடலின் ஒரு வரியில் உள்ள ஒரு வார்த்தையோடு சேர்ந்து இந்த ஊரின் பெயர் அக்காலத்தில்



www.aanmeegamalar.com









சிலம்பரையன்பாளையம் என வழங்கப்பட்டுள்ளது. சிலம்பரையன் என்பதற்குப் பொருள் மலையரசன். மலையரசனின் பொற்பாவையான பார்வதி தேவி எவ்வுலகினுக்கும் இறைவனாகிய ஈசனை காதலிக்க தானும் அவளைக் காதலிக்கும் நேசனும் ஆகிய சிவபெருமானைத் தினமும் நினையப் பெற்றோம் என இந்த தேவாரப் பாடலின் பொருள் கூறுகிறது.

மலையரசன் மகள் பார்வதி தேவி நேசித்த சிவபெருமானை,தானும் பார்வதி தேவியை நேசிக்கும் எம்பெருமானை தினமும் நினையப் பெற்றோம் என திருநாவுக்கரசர் தினமும் சிவ பெருமானை நினைப்பது நலம் என ஆனந்தித்து இப்பாடலில் கூறியதற்கேற்ப அனுதினமும் ஈசன் அருள் வேண்டி அக்காலத்தில் இறைவனுக்கும், இறைவிக்கும் ஆலயம் எழுப்பி இப்பகுதி மக்கள் வழிபட்டு வந்துள்ளனர். இத்தலம் அப்போது மீனாட்சியம்மை உடனமர் சுந்தரேஸ்வரர் ஆலயம் என அழைக்கப்பட்டு வந்துள்ளது.

காலப்போக்கில் பழமையான இத்தலத்தில் வழி பாடுகள் குறைந்து, பராமரிப்பும் இல்லாமல் இருந்து வந்துள்ளது. இந்தப் பகுதியைச் சேர்ந்த ஆன்மீகப் பெரியவர் ஒருவர் இந்த ஆலயத்தில் உள்ள தூண்களில் மீன் இலச்சினை இருப்பதைப் பார்த்துவிட்டு பாண்டிய மன்னர்கள் காலத்தில் திருப்பணி செய்த கோயில் இப்படி பராமரிப்பின்றி உள்ளதே என ஆதங்கப்பட்டு இப் பகுதியைச் சேர்ந்த சிவ பக்தர்களை ஒருங்கிணைத்து ஆலயத் தினை புதுப்பிக்க ஆலோசனை கூறியுள்ளார். அப்பெரியவரின் ஆலோசனைப்படி வழிபாடுகள் செய்யப்பட்டுவந்துள்ளது.



செ.சு.சரவணகுமார்

இதன் பின்னர் வேண்டிடும் பக்தர்களுக்கு வேண்டிடும் வரங்களைத் தந்து இத்தலம் வந்தோரின் வாழ்வை அந்த பரம்பொருள் சிறக்கச் செய்ததால் பக்தர்கள் எண்ணிக்கையும் அதிகமாகியுள்ளது. ஆறு ஊர்களைச் சேர்ந்த சிவபக்தர்கள், பொதுமக்கள் சேர்ந்து பழமையான ஆலயம் இருந்த இடத்திலேயே முற்றிலும் புதிய ஆலயத்தை ஆகம விதிப்படி எழுப்பியுள்ளனர்.

இத்தல இறைவனுக்கு அழகீசுவரர்,இறை விக்கு அங்கயற்கண்ணி என தமிழில் திருநாமங் களை சூட்டி கடந்த 2017ம் ஆண்டு விமரிசையாக குடமுழுக்கு நடத்தியுள்ளனர்.

கிழக்கு நோக்கிய திருத்தல வளாகத்தின் முன் கொங்கு நாட்டிற்குரிய விளக்குத்தூண் நிறுவப்பெற்றுள்ளது.இதனையடுத்து ஆலயத்தினுள் நுழைந்ததும் அழகிய மண்டபத்தினுள் பலிபீடத்தையடுத்து நந்தியெம்பெருமான் காட்சி தருகிறார்.முன் மண்டபத்தில் விநாயகர்,முருகர் தரிசனம் தருகின்றனர்.

கருவறையில் அம்பிகை அங்கயற்கண்ணி நின்ற நிலையில் மங்கையரின் குங்குமம் காக்கும் நாயகியாய் அருள்பாலிக்கிறாள்.அம்பிகையின் சந்நிதியின் இடப்பாகத்தில் உள்ள சந்நிதியில் இறைவன் அழகீசுவரர் என்ற திருநாமம் கொண்டு அற்புத வாழ்வளிக்கும் நாயகராக அருள்பாலிக்கிறார்.

இவரின்கோஷ்டத்தில்நடன கணபதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோத் பவர், பிரம்மா, கொற்றவை ஆகிய தெய்வங்கள் காட்சி தருகின்றனர். வெளிச்சுற்றில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்,சுந்தரர்,மாணிக்கவ ாசகர்,சண்டீசர் பெருமான்,பைரவர் மற்றும் நவகிரக நாயகர்கள் தரிசனம் தருகின்றனர்.




பெரும்பாலான தலங்களில் இறைவனுக்கு இடப்பாகத்தில் இறைவி அருள்பாலிப்பாள். இங்கு இறைவிக்கு இடப்பாகத்தில் இறைவன் அருள்பாலிப்பது இத்தல சிறப்பு.

இத்தல அம்பிகையை திருமணமாகாத பெண்கள் வழிபட்டால் திருமணத்தடை நீங்கும். கர்ப்பிணி பெண்கள் வேண்டிட அவர்களுக்கு கருவை காத்து ரட்சிக்கும் வரத்தையும், சுகப்பிரசவம் ஆகும் படியும் அருளாசி வழங்கிடுவாள் இந்த தேவி என்கின்றனர் இத்தலம் வந்து வேண்டிடும் பெண் பக்தர்கள்.

தினந்தோறும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது. பிரதோஷம், அம்மாவாசை, பௌர்ணமி, தேய்பிறை அஷ்டமி, தமிழ் மாதம் முதல் நாள்,சதுர்த்தி,கிருத்திகை ஆகிய முக்கிய விரத தினங்களில் சிறப்பு அபிஷேக, அலங்கார ஆராதனை நடைபெறுகிறது.

சோமவாரம் என்பது திங்கள் கிழமையை குறிக்கிறது. 16 திங்கள் கிழமைகள் இத்தல இறைவன் இறைவியை நினைத்து விரதமிருந்து பிரார்த்தனை செய்தால் எவ்வளவு மன கஷ்டங்களும் உங்களிடம் இருந்து சுலபமாக நீங்கி விடும்.

கருத்து வேறுபாடுகளால் பிரிந்த கணவன் மனைவி, உற்றார் உறவினர் ஒன்று சேர்ந்து வாழ சிவபெருமானுக்கு சோம வாரப் பூஜை செய்துவந்தால் விரைவில் ஒன்று சேர்வர்.கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் சூழ்நிலைகளை இந்த விரதம் மேற்கொள்பவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும் என்பது ஐதிகம்.

வியாழன் தோறும் காலை தட்சிணாமூர்த்திக்கு சிறப்பு வழிபாடு செய்யப்படுகிறது.வெள்ளிக்கிழமை நாளில் அம்பிகை அங்கையற்கண்ணிக்கு பெண்கள் சிறப்பு வழிபாடு செய்கின்றனர்.

மகா சிவராத்திரி நாளில் ஐந்து கால பூஜை,நாம சங்கீர்த்தனை,பக்தி சொற்பொழிவு சிறப்பாக நடைபெறும்.

ஐப்பசி மாதம் பௌர்ணமியன்று அன்னாபிஷேக பூஜை இத்தலத்தில் விமரிசையாக செய்யப்படுகிறது. ஆடி மாதம் ஐந்து வார வெள்ளிக்கிழமை நாளில் பெண்கள் திரளாக பங்கேற்று விளக்கு பூஜை செய்கின்றனர்.

திருக்கோயில் அமைவிடம்:

கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூரிலிருந்து வாகராயம்பாளையம் வழியாக செலம்பராயம் பாளையம் சென்றடையலாம்.வாகராயம் பாளையத்திலிருந்து கால் டாக்ஸி, ஆட்டோ வசதி உள்ளது..

– சென்னி வீரம்பாளையம்
செ.சு.சரவணகுமார்
தொடர்புக்கு: 93458 88883

ராமனுக்கு உதவிய அணிலைப் போன்று
ஆன்மிகத்திற்கு எங்கள் சேவை மிகச் சிறியது

# எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்–ஆப்,
இ–புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

## இதுவரை 130 இதழ்களை கடந்துள்ளோம்.

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



**ஆன்மிகமலர் டிரஸ்ட்**
Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# ஒரே சக்திதான் செயல்படும் வகையால் சக்தி கூறுகளாக காட்டப்படுகிறது

சாக்த மதத்தின் அன்னை ஆதி பராசக்தியை மக்கள் எப்படி எல்லாம் வழிபடுகிறார்கள் அவள் எப்படி எல்லாம் காட்சி தருகிறாள் என்பதை சிறிது காண்போம்

அன்னை ஒன்பது வடிவமாக அன்பர்களால் பார்க்க படுகிறாள் அன்னையின் இந்த ஒன்பது வடிவங் களுக்கும் தனித்தனி தத்துவங்கள் உள்ளன முத லாவது உருவம் மனோன்மணியாகும் இதன் தத்துவம் பக்குவப் பட்ட ஜீவாத்மாக்களின் பாவங்களை கழுவி கழைந்து பரமாத்மாவோடு இணைப்பதாகும்.

இரண்டாவதாக சொல்லப்படும் சர்வ பூதாமணி என்ற உருவத் தோற்றம் உயிர்களோடு ஒன்றி கலந்து அதன் பாவங்களை விலக்குவதாகும்.

மூன்றாவது பூமியில் விஷ சத்துக்கள் பெரு காமல் சூரிய சக்தியால் நல்லவைகளை வளர செய்யும் பலபிரதமணி உருவமாகும்.

நான்காவது சந்திரனில் இருந்து கிடைக்கும் காந்தசக்தி யை கொண்டுபயிர் பச்சைகளை உயிர் இனங்களை தழைத் தோங்க செய்யும்

கடவுள் உருவாக்கிய மதம்



பலவிகரணி வடிவமாகும்.

ஐந்தாவதாக வானத்தில் உள்ள எல்லா பொருட்களையும் ஏற்று நின்று அவைகள் தன்னில் கலக்க செய்யும் கலவிசரணி உருவமாகும்.

ஆறாவதாக காற்றில் பிரணவமாய் நிற்கும் காளி.

ஏழாவதாக நெருப்பில் வெப்பமாய் நின்று உயிர் வளர செய்யும் ரௌத்திரி.

எட்டாவதாக தண்ணீரில் குளிர்ச்சியையும் ஜீவ சக்தியையும் நிலை பெற செய்யும் சேஸ்றா.

ஒன்பதாவதாக ஐம்பூதங்களையும் ஆட்சி செய்யும் வாமை

கடவுள் கொள்கையின் அடிப்படை அனைத்திற்கும் மேலாக ஒரே சக்திதான் உள்ளது என்றாலும் அது செயல்படும் வகையால் பல சக்தி கூறுகளாக பிரித்து காட்டப்படுகிறது இதை சிவஞான சித்தியார் தமது சுபக்கம் என்ற நூலில் சக்திதான் பலவோ என்னில் தான் ஒன்றே அநேகமாக வைத்திடும் காரியத்தால் என்று சொல்கிறார்

சைவ சமயமும் சாக்த சமயமும் அன்னைக்கு எந்த அளவு முக்கியத்துவம் கொடுத்து சிறப்பிக்கிறதோ அதே அளவு ஸ்ரீ வைஷ்ணவமும் தாயாருக்கு சிறப்பிடம் கொடுக்கிறது சைவத்தில் நவ சக்தியாக வழிப்படப் படும் தேவி வைஷ்ணவத்தில் ஆதிலஷ்மி தனலஷ்மி தானியலஷ்மி சந்தானலஷ்மி மகாலஷ்மி கஜலஷ்மி வீர லஷ்மி விஜயலஷ்மி என்ற அஷ்ட லஷ்மிகலாக போற்றி வணக்கப்படுகிறாள்

திருப்பாற் கடலில் பள்ளிகொண்டிருக்கும் எம்பெருமான் திருமாலின் சிறப்புக் குறிய சக்தியாக திருமகள் விளங்குவது அனைவரும் அறிந்ததே தன்னை எப்போதும் விலகாது இருக்க வேண்டும் என்பதற்காகவே தனது அழகிய மார்பில் திருமகளை நாராயணன் குடிவைத்திருக்கிறார் நாராயணனின் உடம்பில் நாராயணனி எப்படி இடம் பெற்று இருக்கிறாளோ அதே போலவே சிவ பெருமானின் உடம்பிலும் பராசக்தி பாதியாக இடம் பெற்று இருக்கிறாள் இவை எதை காட்டுகிறது என்றால் சிவனுக்கும் நாராயணனுக்கும் தானே மூலம் என்பதை அன்னை சொல்லாமல் சொல்லி நம்மை விளங்க வைக்கிறாள்

ஸ்ரீ வைஷ்ணவத்தில் கூறப்படும் புருஷகார தத்துவ நோக்கில்




தெய்வ திருத்தாயாக அன்னை விளங்குவதால் அவள் தாயார் என அழைக்கப்பட்டு தனி சன்னதியும் கொடுக்கப்பட்டு இருக்கிறாள் இது தவிர எம்பெருமான் நாராயணன் எடுக்கும் ஒவ்வொரு அவதாரத்திலும் திருமகள் கூடவே வருகிறாள் திருமகள் இல்லாத திருமால் இல்லை என்றே சொல்லலாம்

சிவனுக்கு பார்வதியாகவும் நாராயணனுக்கு மகாலஷ்மியாகவும் துணை வருகின்ற அன்னை






சக்தி படைப்பு கடவுளான பிரம்ம தேவனுக்கு சரஸ்வதியாக துணை வருகிறாள் எப்படி காக்கும் கடவுளின் உடம்பிலும் அழிக்கும் கடவுளின் உடம்பிலும் சக்தி குடிகொண்டு இருக்கிறாளோ அதே போலவே படைக்கும் கடவுளின் திருநாவிலும் அன்னை சக்தி குடிகொண்டு இருக்கிறாள் திருமால் சிவன் இருவருக்கும் ஞான சக்தியாக துணை புரிகின்ற தாயானவள் பிரம்மாவுக்கோ கிரியா சக்தியாக துணை செய் கிறாள்

இந்து சமயத்தில் உள்ள ஆறு பிரிவுகள் மட்டும் அல்லாது பௌத்த ஜைன மதங்களிலும் சரஸ்வதி தேவி சிறப்பிக்கப் படுகிறாள்.

கங்கை நதிக்கு நிகரான புண்ணிய நதியாகவும் அன்னை சரஸ்வதி பவனி வருகிறாள் நதிகளில் உயர்வானது சரஸ்வதி தேவியருள் மகிமை பொருந்தியவள் சரஸ்வதி என்று ரிக் வேதம் இவளை தான் குறிப்பிடுகிறது வேத கால யாகங்களில் சரஸ்வதி தேவி ஒரு முக்கிய தேவதையாகவும் கருதப்பட்டு வந்தாள்




சரஸ்வதி தேவியின் வழிப்பாடு இந்தியாவில் மட்டும் அல்லாது தீபெத் ஜாவா ஜப்பான் போன்ற கிழக்காசிய நாடுகளிலும் ஆதிகாலம் தொட்டே இருந்து வருகிறது நமது தமிழகத்தை பொறுத்தவரையிலும் சரஸ்வதி வழிப்பாடு தனிப் பாரம்பரியம் மிக்கது என்றே சொல்லலாம்.

சைவ சமய ஞானியான குமரகுருபரருக்கு அன்னை சரஸ்வதி தேவியே கண்கண்ட தெய்வமாகும் அவர் எழுதிய சகலகலாவல்லி மாலையை பாராயணம் செய்தால் அசடன் கூட அறிஞன் ஆவான் என்ற நம்பிக்கை இன்றும் நடைமுறையில் இருக்கிறது

முப்பெரும் தேவி வழிப்பாட்டை தவிர சப்தகன்னிமார் வழிபாடும் தாய்தெய்வ வழிப்பாட்டின் மற்றொரு அங்கமாகும் பிராம்மி மகேஸ்வரி கௌமாரி வைஷ்ணவி வராகி இந்திராணி சாமுண்டி ஆகிய ஏழு தேவிகளோடு யோகஸ்வரி என்ற தேவியையும் சேர்த்து கன்னிமார் எண்மர் அதாவது அஷ்டகன்னிகள் என்றும் சிலர் வழிப்படுகிறார்கள் அஷ்டகன்னிகள் வழிப்பாடு ராமேஸ்வரம் திருநெல்வேலி கன்னியாகுமரி

ஆகிய தென்மாவட்டங்களில் இன்றும் பிரபலம்

நன்மையை கெடுக்கும் தீய வற்றை எதிர்க்கும் ஆற்றல்களே சப்தமாதர்களாகும் உதாரணமாக காமத்தை கொல்லும் யோகேஸ்வரி ஆணவமதத்தை எதிர்க்கும் பிராம்மி குரோதத்தை மறைக்கும் மகேஸ்வரி மோகத்தை வெல்லும் கௌமாரி உலோபத்தை தடுக்கும் வைஷ்ணவி மார்ச்சரியத்தை அழிக்கும் இந்திராணி பைசாசம் என்ற தீய சக்திகளை வேரறுக்கும் சாமூண்டி என்று வைகைப்படுத்தப் பட்டுள்ளது இந்த தீயவைகள் அனைத்தும் மனித குலத்திற்கு எதிரானவைகள் என்பது சொல்லிதெரிய வேண்டியது இல்லை



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

அன்னை வழிப்பாட்டில் வராகி வழிப்பாடு என்பது மிகவும் முக்கியமானதாகும் பொதுவாக இந்திய மன்னர்களின் வரலாற்றை ஆழ்ந்து ஆராயும் போது அவர்கள் அனைவருமே எதாவது ஒரு வகையில் வராகி தெய்வத்தின் பக்தர்களாக இருப்பதை அறியலாம் சிற்பகலைகளின் உறைவிடமாக திகழும் மாமல்லபுரத்தில் தனியாக வராக மண்டபம் எழுப்பப்பட்டிருப்பதை காணும் போது மாமன்னன் மகேந்திர பல்லவன் தீவிரமான வராகி பக்தன் என்பதை உணர முடிகிறது அது மட்டும் அல்ல நரசிம்ம பல்லவன் கூட வராகி தேவியை வழிப்பட்டவன் தான் தமிழர்களின் ஆட்சியை உலக நாடுகள் சிலவற்றில் திறம்பட நடத்திய சோழப் பேரரசன் ராஜராஜ சோழன் குலோத்துங்க சோழன் போன்றோர்களும் வராகியை இஷ்ட தெய்வமாக வழிபாட்டு இருக்கிறார்கள்.

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**
மேலும் தொடர்பு கொள்ளவும் **போன்: 09442426434**

aanmeegamalar.com வழங்கும்
# தினம் ஒரு திருக்குறள்





ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள். aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்





# பொன்மொழிகள்

- பணத்தால் பெருமை கொள்ளக் கூடாது. உறவினர் ஏழையானாலும் அவர்களை மதிப்பது நம் கடமை.
- ஒருவரின்உண்மையான அன்பையும் அறிவையும் பேச்சின் மூலம் அறிய முடியாது. அவர்களின் செயலின் மூலம் தான் காண முடியும்.
- பசு போன்ற மென்மையான மனிதர்களிடம் பழகுவது நன்மை தரும். பாம்பு போன்ற நஞ்சு தன்மை கொண்ட மனிதர்களிடம் நெருங்கவே கூடாது.
- நாளடைவில் உன் உறவுகள் கூட உன்னை கைவிட கூடும். ஆனால் நீ செய்த நன்மைகள் உன் கூடவே வரும்.
- எந்தச் செயலில் ஈடுபட்டாலும் தனக்கென சுயநலத்துடன் செய்வது கூடாது. அது பிறருக்கு நன்மை தருவதாக அமைய வேண்டும்.
- மரணவேதனை லட்சம் தேள்கள் கொட்டியது போல கொடுமையானது. அதை பக்தியால் தடுக்க முடியாது.
- உடலை வளர்க்க உணவு அவசியம். அதுபோல உயிரை வளர்க்க பிராத்தனை அவசியமானது.
- மனதால் கூட பிறருக்கு துன்பம் நினைக்காத ஒருவரால் தான் துன்பம் இல்லாத வாழ்க்கையை வாழ முடியும்.
- தன்னை தானே சோதித்துக் கொள்பவன் தீமையில் இருந்து விரைவில் விடுபடுவான். மனத் தூய்மை பெற்று நற்செயலிலும் ஈடுபடுவான்.
- விலங்கு உணர்ச்சியில் இருந்து மனிதனை உயர்த்துவது ஆன்மீகம்.
- குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து பொங்கலிடுவதோடு ஏழைகளுக்கு தர்மமும் செய்ய வேண்டும்.
- அனைத்து உயிர்களும் இறைவன் வாழும் கோவில் தான். அதனால் அனைத்து உயிரையும் மதித்து வாழ வேண்டும்.
- சிறியவன் என்று யாரையும் இகழ்வது கூடாது. அனைவரையும் சமமாக கருதுபவனே சிறந்த மனிதன்.
- இந்த பிறவியில் செய்த நன்மையின் பயன் மறுபிறவியில் புண்ணியமாக நம்மை வந்தடைகிறது.
- பிறர் கூறும் வசை மொழிகளைக் கூட இனிய சொற்களாக கருதுபவனே சிறந்தவன்.
- உலகில் எல்லாம் தெரிந்தவர்எவருமில்லை. எதுவும் தெரியாதவர் என்றும் எவரும் கிடையாது.
- ஒரு செயலை செய்யும் போது அதன் விளைவுகளை பலமுறை சிந்தித்து செய்ய வேண்டும்.
- கடவுளை வழிபட்டால் ஒரு மடங்கு பலன். மகான்கள், அடியவர்களை வழிபட்டால் இருமடங்கு பலன்.
- நல்லவர்கள், பெரியவர்களை வணங்காவிட்டாலும் அலட்சியப்படுத்துவது கூடாது.
- உன்னை நீ காத்துக்கொள்ள விரும்பினால். எந்த நிலையிலும் கோபம் உன்னை கட்டுப்படுத்த அனுமதிக்காதே











# ஆன்மிக உலகின் முதல் இலவச இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி

aanmeegamalar.com

aanmeegamalr (app)–ல்

படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**உடல் நலம் பேணி காப்போம்**

# மனநிலைகள்

## உங்களுடைய முன்னேற்றச் சக்கரங்களின் மீதான தடை

ப்ரிய குருதேவர் அருளுகிறார்: "உங்களுடைய மன நிலைகளை அவை எவ்வளவு பயங்கரமானவையாகத் தோன்றினாலும் சரி, நீங்கள் அவைகளை வெல்லமுடியும். இனிமேலும் நீங்கள் எதிர்மறை மனநிலைகளுக்கு ஆளாகப் போவதில்லை என்று மனதைத் திடப்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் தீர்மானத்தையும் மீறி ஒரு சிடுசிடுப்பான மனநிலை வந்தால், அதை ஏற்படுத்திய காரணத்தை ஆராய்ந்து அதைப்பற்றி ஆக்கபூர்வமாக ஏதாவது செய்யுங்கள். அலட்சியம் உங்கள் மனநிலையாக இருந்தால் அந்த அலட்சியமான நிலையில் இருந்துகொண்டு செயல்களை தொடர்ந்து செய்துகொண்டிருக்காதீர்கள்; ஏனெனில் அலட்சியம்தான் எல்லா மனநிலைகளிலும் மிகவும் மோசமானது. அம்மாதிரியான நேரங்களில் நீங்கள் உங்களுடைய சொந்த கிருஷ்டிகர்த்தா இல்லை என்பதை நினைவு கூருங்கள். இறைவன் உங்களைப் படைத்தான். அவன் உங்களுக்காக இப்பிரபஞ்சத்தை நடத்திக்கொண்டிருக்கிறான். உங்கள் தொழில் எதுவாக இருந்தாலும், அதை அவனுக்காக உற்சாகத்துடன் செய்யுங்கள். அவன் உங்களுக்கு எல்லையற்ற சக்தியைக் கொடுத்துள்ளதால் ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் உங்களை சுறுசுறுப்பாக ஈடுபடுத்திக்



கொள்ளுங்கள். போதையூட்டும் மனநிலைக்கும் இடம் கொடுப்பதன் மூலம் உங்களை மனதளவில் ஒரு தோல்வியாளராக ஆக்கிக்கொள்ள எப்படி துணிந்தீர்கள்! நாசம் விளைவிக்கும் இத்தகைய மனநிலையிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள். இவைகளே உங்களுடைய வளர்ச்சியாகிய சக்கரங்களின் மீதுள்ள உண்மையான தடைகள். அவற்றை நீங்கள் விடுவிக்காத வரையில், நீங்கள் முன்னேற முடியாது. நீங்கள் இறைவனின் குழந்தை என்றும், இன்னல்கள் எதுவாக இருந்தாலும், அவற்றை வெல்லும் சக்தி உங்களிடம் உள்ளதென்றும், ஒவ்வொரு காலைவேளையிலும் உங்களுக்கு நினைவூட்டிக்கொள்ளுங்கள். பரம்பொருளின் பிரபஞ்ச சக்திக்கு வாரிசாகிய நீங்கள் அபாயத்தைவிட அதிக அபாயகரமானவர்"

மேலும் அவர் தொடர்கிறார்: "ஒரு புத்திசாலியான சிறுவன் எளிதான கணக்குகளுக்கு விடைகாண அக்கரை காட்டுவதில்லை; கடினமானவற்றின் சவாலை அவன் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறான். ஆனால் அநேகர் வாழ்க்கையில் ஏற்படும் பல பிரச்சனைகளைக் கண்டு அஞ்சுகின்றனர். நான் அவற்றைக் கண்டு ஒருபோதும் அஞ்சியதில்லை; ஏனெனில் நான் எப்போதும் பிரார்த்திப்பது "இறைவா, உமது சக்தி என்னுள் அதிகரிக்கட்டும். உமது உதவியுடன் எனது கஷ்டங்களை என்னால் எப்பொழுதும் வெல்ல முடியும் என்ற ஆக்கபூர்வமான உணர்வுநிலையில் என்னை வைத்திருக்கவும்." இனி மேலும் சிந்திக்க முடியாதென்ற அளவிற்கு ஒரு பிரச்சனையைப் பற்றி ஆக்கபூர்வமாகச் சிந்தியுங்கள். ஒரு பிரச்சனைக்கு நான் தீர்வு காணும்போது, அதன் தீர்வுக்கான சாத்தியக்கூறுகள் அனைத்தையும் உள்ளடக்குவதற்காக, நான் எந்த அளவிற்கும், "என்னால் முடிந்த அளவு செயற்பட்டுள்ளேன். என்னால் செய்ய முடிந்ததெல்லாம் அவ்வளவுதான்" என்று என்னால் உண்மையாகக்கூற முடியும்வரை செல்வேன். பின்னர் அதை மறந்து விடுகிறேன்.



குருப்ரியா

"ஒரு பிரச்சனையைப் பற்றிய கவலையை தனது உணர்வு நிலையில் வைத்திருப்பவர் சோர்வான மனநிலைக்குள்ளாகிறார். அதைத் தவிர்த்துவிடுங்கள். ஒரு பிரச்சனை வரும்போது, அதைப்பற்றியே சிந்தித்க்கொண்டிருக்காமல் உங்களை அதிலிருநது விடுவித்துக்கொள்வதற்கான செயற்பாட்டின் ஒவ்வொரு சாத்தியமான வழியையும் பற்றிச் சிந்தியுங்கள். உங்களால் சிந்திக்க முடியாவிட்டால், உங்களுடைய குறிப்பிட்ட பிரச்சனையை மற்றவர்களுடைய இதே மாதிரியான பிரச்சனையுடன் ஒப்பிட்டுப்பார்த்து அவர்களுடைய இனுபவத்திலிருந்து எவ்வழிகள் தோல்விக்கும், எவ்வழிகள் வெற்றிக்கும் வழிகோலுகின்றன என்பதைக் கற்றுக் கொள்ளுங்கள். நியாயமானதாகவும்






மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

நடைமுறைக்கேற்றதாகவும் தோன்றும் வழிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றைச் செயலாற்றுவதில் தீவிரமாக ஈடுபடுங்கள். பிரபஞ்ச நூலகம் முழுவதும் உங்களுள் மறைந்துள்ளது. நீங்கள் அறிய விரும்பும் அனைத்தும் உங்களுக்குள்ளேயே உள்ளது. அவற்றை வெளிக்கொணர்வதற்கு ஆக்கபூர்வமாகச் சிந்தியுங்கள்.”

குருதேவர் மேலே கூறியதற்கான ‘தேவனும் வியந்த தீர்ப்பு’ என்ற ஓர் உதாரணக்கதையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஓர் ஊரில் செங்கோடன் என்ற உழவன் இருந்தான். அவனுக்கும் அன்னம் என்ற பெண்ணிற்கும் திருமணம் நடந்தது. இருவரும் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்திவந்தனர். மணமான சில நாட்களில் அன்னத்தின் தந்தை அங்கு வந்தார். “ நாங்கள் செல்லமாக வளர்த்த பெண் இவள். இவளைப்பிரிந்து என்னாலும் என் மனைவியாலும் இருக்க முடியவில்லை. எங்கள் ஊருக்கு இவளை அழைத்துச்சென்று பத்துநாட்களில் திருப்பி அனுப்பிவைக்கிறேன்” என்றார். செங்கோடனும் ‘அழைத்துச் செல்லுங்கள்” என்றான். அன்னத்தை அழைத்துக் கொண்டு புறப்பட்டார் அவர். ஒரு மாதம் ஆயிற்று. தன் மனைவி திரும்பிவராததனால் கோபம் கொண்டான் செங்கோடன். மாமனார் ஊரை அடைந்தான் அவன். “என் மனைவியை இப்பொழுதே என்னுடன் அனுப்ப வேண்டும்” என்று வற்புறுத்தினான். “மாப்பிள்ளை, இன்று நவமி. இந்த நாளில் பயணம் செய்யக்கூடாது. நாளை அழைத்துச் செல்லுங்கள்” என்றார் மாமனார். “நான் இன்றுதான் அழைத்துச் செல்வேன்” என்று பிடிவாதமாகச் சொன்னன் அவன். அவர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவன் கேட்கவில்லை.”என் மனைவியை நான் அழைத்துச் செல்கிறேன். நவமி என்ன செய்யும்? என்று சொல்லிய அவன் தன் மனைவியுடன் புறப்பட்டான். நீண்டநேரம் அவர்கள் பயணம் செய்தார்கள். வழியில் ஒரு குளத்தைப் பார்த்தான் அவன். தன் மனைவியிடம் “ நீ அந்த மரத்தின் அடியில் அமர்ந்திரு. நான் குளத்தங்கரைக்குச் சென்று வருகிறேன் என்றான். அவள் மரத்தடியில் அமர்ந்தாள். அப்பொழுது நவமி தேவன் அவள் கணவன் செங்கோடனைப் போலவே வடிவம் எடுத்துக்கொண்டு அங்கு வந்தார். அவளைப் பார்த்து “வா போகலாம்” என்று அழைத்தார். அவரைத் தன் கணவன் என்று நினைத்த அவள் அவர் பின்னால் சென்றாள். சிறிது நேரத்தில் அங்கு வந்தான் செங்கோடன். மரத்தடியில் மனைவி இல்லாததை அறிந்து திடுக்கிட்டான். எவனோ ஒருவன் பின்னால் தன் மனைவி போவதைக் கண்டு அங்கு ஓடி வந்தான். நவமிதேவனைப் பார்த்து கோபத்துடன் “என் மனைவியை இழுத்துக்கொண்டுப் போகிறாயே?” என்று கத்தினான். “இவள் என் மனைவி., இவளை எங்கும் அழைத்துச் செல்வேன். அதைக் கேட்பதற்கு நீ யார்?” என்று பதிலுக்குக் கத்தினார் நவமிதேவன். அவர்கள் இருவரில் தன் கணவன் யார் என்பதைக் கண்டுபிடிக்கமுடியாமல் திகைத்து நின்றாள் அன்னம். அவர்கள் சண்டையிடுவதைக் கண்டு அங்கே கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் ஒருவர், “ நீங்கள் ஏன் வீணாகச் சண்டையிடுகிறீர்கள்? நீதிபதி மரியாதைராமனிடம் செல்லுங்கள்” என்றார். அவர்கள் இருவரும் அன்னத்தை அழைத்துக்கொண்டு நீதிபதி மரியாதைராமனிடம்


ஆன்மிகமலர்
ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ–டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...
ஆன்மிக சேவை
செய்யும் நமது
சேனலை
Subscribe
like & share

வந்தார்கள்.

அவர்கள் இருவரும் ஒரே வடிவத்துடன் சிறிதுகூட வேறுபாடு இல்லாமல் இருப்பதைப் பார்த்து வியப்படைந்தார் மரியாதைராமன். அன்னத்தைப்பார்த்து அவர், " இவர்களில் உன் கணவன் யார்?" என்று கேட்டார், "நீதிபதி அவர்கள்! இருவரும் ஒரே அச்சாக இருக்கிறார்கள். யார் என் கணவன் என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

நீங்கள்தான் கண்டுபிடித்து என்னைக் காப்பாற்ற வேண்டும், "இருவரும் ஒரே வடிவத்துடன் இருக்க வாய்ப்பே இல்லை. இவர்களில் ஒருவர் மாயையில் வல்ல தேவனாக இருக்க வேண்டும். எப்படி உண்மையைக் கண்டுபிடிப்பது?" என்று சிந்தித்தார். நல்ல வழி ஒன்று அவருக்கு தோன்றியது. மண்பானை செய்பவன் ஒருவனை அங்கு வரவழைத்தார். சுண்டு விரல் அளவு ஓட்டையுள்ள பானை ஒன்றைக் கொண்டுவரச் சொன்னார். அவனும் கொண்டுவந்து தந்தான். அந்தப்பானையை அவைநடுவே வைத்தார் அவர்.

பிறகு அவர்கள் இருவரையும் பார்த்து, "உங்களில் யார் இந்தப் பானையின் பெரிய வாயின் வழியாக நுழைந்து கீழே உள்ள சிறிய ஓட்டையின் வழியாக வெளியே வருகிறார்களோ அவரே இவளின் உண்மையான கணவன் என்றார் அவர். இதைக் கேட்ட செங்கோடன் 'இந்தச் செயலை எந்த மனிதனாலும் செய்ய முடியாதே' என்று திகைத்து நின்றான். ஆனால் நவமி தேவனோ அந்தப் பானைக்குள் நுழைந்தார். சுண்டுவிரல் அளவுள்ள ஓட்டையின் வழியாக வெளியே வந்து எல்லோரையும் வியப்படையச் செய்தார். இதைக் கண்ட மரியாதைராமன் நீதிபதி இருக்கையிலிருந்து எழுந்தார்.

நவமி தேவனை மூன்று முறை வலம் வந்து வணங்கினார். "நீர் மாயம் வல்ல தேவர் என்பதை அறிந்துகொண்டேன். அதனால் அவளின் கணவன் நீர் அல்ல என்பதையும் புரிந்து கொண்டேன். நீர் எதற்காக இவர்களின் வாழ்க்கையில் குறுக்கிட்டு இவ்வளவு துன்பத்தைத் தந்தீர்?" என்று பணிவுடன் கேட்டார். அதற்கு நவமிதேவன், "மரியாதைராமா! நான்தான் நவமிதேவன். இவன் மாமனார் இவனிடம் நவமி நாளில் மனைவியை அழைத்துச் செல்ல வேண்டாம் என்றார். நவமி என்ன செய்யும் என்று கேலி பேசிவிட்டு இவன் தன் மனைவியுடன் புறப்பட்டான், இவனுக்கு நல்ல பாடம் புகட்டவே இவனைப் போலவே வடிவெடுத்து இப்படிச் செய்தேன். உன் அறிவுக்கூர்மையால் உண்மையைக் கண்டுபிடித்து விட்டாய். என் பாராட்டுகள். இவ்வுலகில் நீ பேரும் புகழும் பெறுவாய். மறுமையில் வீடுபேறும் அடைவாய்" என்று வாழ்த்திவிட்டு மறைந்தார்.

செங்கோடனுக்கும் அவன் மனைவிக்கும் அறிவுரை கூறி அனுப்பிவைத்தார் மரியாதைராமன். இவ்வாறு தேவர்களாலும் மனிதர்களாலும் சிறந்த நீதிபதி என்று புகழப்பட்ட மரியாதைராமன் பல ஆண்டுகள் வாழ்ந்து சிக்கலான வழக்குகளை எல்லாம் தீர்த்து வைத்து பெரும் புகழ் பெற்றார்.

இந்தக் கதையிலிருந்து தெரியவருவது என்னவென்றால், குருதேவர் கூறியுள்ளவாறு, ஒரு பிரச்சனை வரும்போது அதைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்காமல், உங்களை அதிலிருந்து விடுவித்துக்கொள்வதற்கான செயற்பாட்டின் ஒவ்வொரு சாத்தியமான வழியையும்பற்றி சிந்தியுங்கள்ஞ்ஞ்" அவ்வாறு குருதேவர் கூறியுள்ளதைச் செயல்படுத்தினால் நல்ல விடை கிடைக்கும். எனவே முதலில் குருதேவருடைய போதனைகளை பின்பற்றினால் அதுவே நம் வாழ்க்கைக்குப் பயனுள்ளதாகவும் அதே சமயம் இறைவனை அடைவது என்ற நமது முதன்மையான குறிக்கோளும் நிறைவேறிவிடும். அதனால் பிரச்சனையைச் சிந்திக்காமல் அதிலிருந்து வெளியில் வருவதற்கான வழியைச் சிந்திக்க வேண்டும். இரண்டாவதாக பெரியவர்கள் சொல்வதை இளையவர்கள் கேட்டுத்தான் ஆக வேண்டும். அவர்கள் நம்முடைய நன்மையை கருதுகிறார்கள் என்பதையும் இக்கதை சுட்டிக்காட்டுகிறது!


www.aanmeegamalar.com

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்) சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

# எட்டு ஊர்களை காக்கும் பைரவர்

அழிவிடைத்தாங்கி !...ஸ்ரீசொர்ணகாலபைரவர் எழுந்தருள்புரியும் அற்புதமான திருத்தலம். போர்க் காலத்தில் ஐந்து படைகள் இங்கு தங்கியிருந்ததால் ஐபடைத்தாங்கி என்றழைக்கப்பட்ட இவ்வூர் மருவி அழிவிடைத்தாங்கி என்றானது. இங்கே தனியே கோவில் கொண்டு, பக்தர்களின் பயங்களை நீக்கி, வரங்களை தந்தருள்கின்றார் ஸ்ரீ பைரவமூர்த்தி.

சிவனின் அம்சமாக, ரௌத்ரமூர்த்தியாகத் திகழும் இந்த பைரவர் இத்தலத்தினில் நெற்றிக்கண்ணுடன் காட்சி தந்து நம்மையெல்லாம் பரவசப்படுத்துகின்றார்.

சனிக்கும், வாஸ்துவுக்கும்குருவாக, எமனின் அதிகாரம்பெற்ற இந்தபைரவர். ஜ்வாலை முடியுடன், சூலம் கபாலம் பாசம் உடுக்கை ஆகிய ஆயுதங்களை ஏந்தி, பாம்பைப் பூணூலாகவும், அரைஞான்கயிறாகவும் அணிந்து, இரு தொடைகளிலும் மண்டையோட்டு மாலையினைச் சாற்றிக்கொண்டு, தெற்கே முகம் காட்டி ஸ்ரீ சொர்ணகால பைரவர் என்கிற பெயர் தாங்கி அதியபூர்வ கோலத்தில் இங்கே காட்சிக்கின்றார். இவரது வாகனமான நாய் கிழக்கே முகம் காட்டி நிற்கிறது.

இந்த பைரவர் சுற்றியுள்ள எட்டு ஊர்களுக்கும் காவல் தெய்வமாக விளங்கி நல்லருள் புரிகின்றார்.

வருடத்தில் எட்டு விசேட தினங்களில் இந்த எட்டு ஊர்களுக்கும் திருவீதியுலா சென்று, அவ்வூர் மக்களின் தீவினைகளைப் போக்குவது இப்பெருமானது வழக்கமாகும்.

தைப்பூசத்தன்று மோட்டூருக்கும், தை கிருத்திகையில் பெருமாள்பேட்டைக்கும், காணும் பொங்கலன்று











அழிவிடைதாங்கியிலும்,மயிலாரில் கோணன்மேடைக்கும்எழுந்தருள்புரிகின்றார்.

பிறகு மாசிமகத்தன்று ஜம்போடைக்கும்,சிவராத்திரியில்தக்காம்பாளையத்திற்கும் எழுந்தருளும் இப்பைரவேஸ்வரர்... பங்குனி உத்திரத்திற்கு எடையார்பாளையத்திலும், ஆருத்ராவிற்கு வயலூரிலும் எழுந்தருளி காட்சி கொடுக் கின் றார்.

இத்தல உற்சவத் தி ரு மே மே னி ய ரி ன் கலைநயத்தை வர்ணிக்க முடியாது. இவரது பழமையினை கணிக்க இயலாது. அவ்வளவு பிரகாசமாக திகழ்கின்றார்.

காஞ்சி மாமுனிவர் மகா பெரியவாளால் இந்த ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அன்று முதல் இங்கு சிறப்பு வழிபாடுகள் நாள்தோறும் நடைபெற்று வருகின்றன.

இங்கு தேய்பிறை அஷ்டமிமற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்இராகு காலம் மற்றும் எமகண்ட வேளையில் சிறப்பு அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெறுகின்றன. கார்த்திகை மாதத்தில் வரும் கால பைரவாஷ்டமி இங்கு வெகுசிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

இப்பைரவருக்கு பச்சரிசிமாவு மற்றும் குங்குமத்தால் அபிஷேகம் செய்து, நல்லெண்ணெய் தீபத்தினை கிழக்கு முகமாக 1, 5, 9 என்கிற எண்ணிக்கையில் திரியிட்டு ஏற்றி, மிளகினால் செய்த வடைமாலையினைச் சாற்றி, தயிர்சாதம் நிவேதனம் செய்து வழிபட்டு....கடன் நிவர்த்தி, நோய் நிவர்த்தி, எதிரி நாசம், உத்யோகம், குழந்தை பாக்கியம் மற்றும் சூனியம் கண்டறிதல் போன்ற நற்பலன்களைப் பெற்றுச் செல்கின்றனர் பக்தர்கள் பலர்.

செல்வ வளம் குன்றியவர்கள் நஷ்டத்தாலும், பணக் கஷ்டத்தாலும் தவிப்பவர்கள், கடன் சுமையால் வாடுபவர்கள் இத்தலத்திற்கு வந்து ஸ்ரீ சொர்ணகால பைரவருக்கு தேன் அபிஷேகம் செய்து, மிளகு முடிச்சிட்ட நல்லெண்ணெய் தீபமேற்றி, மிளகு சாதம் படைத்து, வழிபட சிறந்த பலன் உண்டு.

திருவண்ணாமலை மாவட்டம், வெண்பாக்கம் வட்டத்தில், வெண்பாக்கத்தில் இருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது அழிவிடைத்தாங்கி. காஞ்சிபுரம், செய்யாறு மற்றும் ஆற்காட்டில் இருந்து இங்கு வர வழிப்பேருந்துகள் உள்ளன. வெண்பாக்கத்தில் இருந்து ஆட்டோ வசதியுள்ளது.

ஆலயத் தொடர்புக்கு:
A.K.கார்த்திகேய சர்மா: 9786134367.


மோ.கணேஷ்

ஜோதிட கலாநிதி
பழங்காமூர் மோ.கணேஷ்
குருக்கள், ஆரணி, தொடர்புக்கு:
9789156179

# உண்மையில் ஞானம் கிடைக்கும் இடம்

சாது ஒருவர் இமாலயத்துக்கு தவம் செய்யப் போனார். மிக நீண்ட காலம் அங்கே தங்கிதவம் செய்தார்.

தனிமை, மௌனம். ஒரு கட்டத்தில் அவர் தான் போதுமான முதிர்ச்சியும் ஞானமும்அடைந்து விட்டதாக எண்ணினார்.

மனம் முழுவதும் அமைதி அவரை ஆட் கொண்டிருந்தது. சரி, இதுதான் திரும்பிச் செல்ல சரியான தருணம் என்று கீழே இறங்கி நகரத் துக்கு வந்தார்.

வரும் வழியில் ஒருவனைப் பார்த்தார்."கோயில் எங்கே இருக்கிறது?" என்று கேட்டார்.

என்னங்க?" என்றான் அவன். வருடக் கணக் கில் பேசாததால் குரல் சரியாக வரவில்லை போலும் அந்த சாதுவுக்கு.

இன்னொருமுறை கேட்டார்.

இப்போதும் அவனுக்குக் கேட்கவில்லை. "சரியா சொல்லுங்க சாமி, என்ன கேட்கறீங்க? முதல்ல நீங்க யாரு? ஊருக்கு புதுசா?"

அவ்வளவு தான். கோபம் பொத்துக்கொண்டு வந்து விட்டது அவருக்கு .

அற்பப் பதரே, என்னையா தெரிய வில்லை? வருடக்கணக்கில் இமாலயத்தில் தவம்செய்து ஞானம் தேஜஸ் எல்லாம் பெற்று வந்திருக்கி றேன், என்னிடம் எப் படிப்பேசுவது என்று தெரியவில் லை?

கையில் வைத்தி ருந்ததடியைவைத்து அவனை அடிக்கத் தொடங்கி விட்டார்.

**ஓஷோவின் ஞான விளக்கம்,**

சாதுவுவின்வரு டக் கணக்கி லான சாதகம் ஒரு நொடியில் விழுந்து விட்டது.

நீங்கள் எங்கே போனாலும் இமாலயத்துக்கு தப்பித்துப் போனாலும் அதே ஆள் தான். சூழ்நிலை தான் மாறுகிறது.

அதே துருப்பிடித்த பழைய ஆள் தான். கோபம், முட்டாள்தனம், பைத்தியக் காரத்தனம், ஈகோ எதுவும் மாறுவதில்லை.

உண்மையில் நீங்கள் ஞானம் பெறத்தகுதியான இடம் இமாலயம் அல்ல. அங்கேதான் உங்களைக் கோபப்படுத்த, உங்கள் தன்முனைப்பை சீண்ட யாருமே இருக்க மாட்டார்களே!

அங்கே நீங்கள் எதையோ அடைந்துவிட்டதாக ஒரு போலியான உணர்வு தான் மேலோங்கும்.

உண்மையான சோதனை உங்களுக்கு சந்தையில் தான் கிடைக்கும்.

ஜன சந்தடியில் இருக்கும் போதுதான் உங்கள் ஞானத்துக்கு உரைகல் கிடைக்கும்.

அங்கே இருந்து கொண்டு புழுங்கிக் கொண்டு சமநிலை பெற்று ஞானம் பெறுபவனே உண்மையான ஞானி.



www.aanmeegamalar.com

# ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் ஆசீர்வாதத்துடன் ஸ்ரீ சங்கடஹர கணபதி கோவிலின் ஹோமம், பாலஸ்தாபனம்






கிழக்கு டெல்லியில் உள்ள ஸ்ரீ சங்கடஹர கணபதி கோயிலின் பாலஸ்தாபனம் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் ஆசீர்வாதத்துடன், ஏப்ரல் 15 வெள்ளிக்கிழமை, கிழக்கு தில்லி வசுந்தரா என்கிளேவில் உள்ள ஸ்ரீ சங்கடஹர கணபதி கோவிலின் ஹோமம், பாலஸ்தாபனம் நடைபெற்றது.

விக்னேஷ்வர பூஜை, புண்யாவாசனம், மகா கணபதி ஹவனம், ஸ்ரீ லட்சுமி பூஜை, நவக்கிரக ஹவனம், குருபெயர்ச்சி, வாஸ்து சாந்தி, யாகசாலை நிர்மாணம் பல்வேறு பூஜைகள் நடைபெற்றன.

கோ பூஜை (பசு மற்றும் கன்றுக்கு பூஜை), விக்னேஷ்வர பூஜை, புண்யாவாசனம், கலா கர்ஷணம், வேட்டி காரர்ச்சனை திரவியகுதி, பூர்ணாகுதி, தொடர்ந்து பாலாலய மூர்த்திகளுக்கு சிறப்பு அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் தொடங்கின.

அனைத்து பூஜைகளும் ஹோமங்களும் சிவாச்சாரியார் டாக்டர்வைத்தியநாதன் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் செய்யப்பட்டன.

மேலும், பாலாலயம் விழாவை ஒட்டி, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள், 31 மார்ச், 2022 தேதியிட்ட கடிதத்தை வெளியிட்டு, விழாவை மட்டுமின்றி, அதன் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரையும் ஆசீர்வதித்துள்ளார்.

இருபது ஆண்டுகளுக்கு முன், பக்தர்களால் துவங்கப்பட்ட, VESS, பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, பல்வேறு சமய நிகழ்ச்சிகள், வாராந்திர குழு பாராயணம், ஒவ்வொரு மாதமும் சமஷ்டி நவக்கிரக பூஜை, வாராந்திர அன்னதானம் என பல்வேறு சமய நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.



எஸ்.வெங்கடேசன்

இதையொட்டி, ஸ்ரீ சங்கடஹர கணபதிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, மகா தீபாராதனை நடைபெற்று, அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

விழாவில் வசுந்தரா சுற்றுவட்டார பகுதிகள் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண் போன்:
9811161370

எங்கள் சேவைக்கு உங்களின் உதவி தேவை

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் ரூ.10 முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay

SCAN TO PAY

WITH ANY BHIM UPI APP

Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

# மனிதனிடத்தில் தோன்றுகின்ற சிறிய உணர்ச்சியே வெறுப்பு

நமது பெற்றோர்களுக்கு நமது பிறவி அல்லது நாம் ஒரு பெருந்தன்மையை கொடுப்பதாய் இருக்க வேண்டும். உணர்ச்சி பிழம்பான மனிதனே சற்றோ அல்லது பெரிதளவிலோ கெட்டவனாக இருப்பான்.

❖❖❖

முற்றிலும் உண்மையை உணருதல் என்ற வழியே பேரறிவை யும் கடவுளையும் தெரியும்படியாக செய்கிறது. இதற்கு நல்ல தன்மைகள் வேண்டும்.

❖❖❖

கடவுளை உணருவதற்கு நற்குணம் அல்லது நல்ல தன்மை வேண்டும். கெட்ட குணம் உள்ள மக்கள் உலகத்தில் ஒவ்வொரு விஷயத்திலும் பெரிதளவு பாடுபடுவார்கள். துன்பப்பட்டு எதையும் அடைவார்கள். இதுவே அவர்களின் உலகம் கௌதமபுத்தர் இத்தகைய வழிகளை அடிக்கடி விவரமாக சொல்லுவார்.

❖❖❖

இந்திய மண் மஹாவீரர், புத்தர் பெரிய தேசபக்தர்கள் போன்றவர்களை தோற்றுவித்த ஒரு பெரிய நாடு. இந்த நாட்டை ஆண்டவனின் சாம்ராஜ்யத்தோட்டம் என்று சொல்லலாம். இந்த நாட்டின் ஒவ்வொரு அங்குல மண்ணும் அதன் வீரமும் வளமும் மேற்சொன்னோரின் இரத்தம் சிந்திய வளமாகும். இது இப்படியிருக்க தற்பொழுது நம் நாட்டில் சிலரோ பலரோ புத்தியே இல்லாமல் பலபடபேசி பலவாறு வெறுப்பினைத் தூண்டுகிறார்கள்.



அந்த நோக்கத்தோடு எதையும் சொல்லக்கூடாது. தேசபக்தியோடு தான் எதையும் சொல்ல வேண்டும். தேசபக்தியை வெறுத்து பிரச்சார வெறுப்போடு இணைத்து 'மண்ணின் மைந்தர்' என்றெல்லாம் பேசுவது நம்மை நாமே வெறுக்கின்ற செயலாகும். பிறரை வெறுக்கச் செய்கின்ற செயல் பாபமே. மேற்சொன்ன சொல் இதற்கு பயன்படக்கூடாது.

❖❖❖

புத்தனைப் போன்று சிந்தித்தால் ஒரு கோணத்தில் மண்ணின் மைந்தர் என்கின்ற சொல்லும் கருத்தும் அபத்தமானதே. இத்தகைய எண்ணமுடைய மனிதன் இந்நாட்டின் பிரஜையாக இருக்க முடியாது. தனது செயல்களால் இத்தகைய மனிதன் தன்னைத்தானே சுருக்கிக் கொள்ளுகிறான்.

❖❖❖

கடவுள், ஞானிகள், முனிவர்கள், தெளிவான சிந்தனை யாளர்கள் இவர்களே உலக சமுதாயத்தை மேலான சிந்தனைக்கு இட்டு சென்று அங்கிருந்து அவர்களை பரிணாம வளர்ச்சிக்கு அழைத்து செல்லுகிறார்கள்.

❖❖❖

வெறுப்பு, வெறுத்தல் அல்லது வெறுக்கும் தன்மை என்றா லென்ன? அடிப்படையிலேயே ஒருவரை விரும்பாது இருத்தல் என்பதே இது.

❖❖❖

மாபெரும் கோபத்திற்கு முன்னோடியாய் வருகின்ற உணர்வே வெறுப்பு அல்லது வெறுத்தல் என்பதாகும்.

❖❖❖

ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ மேற்சொன்ன குணத்தை கொண்டிருந்தால் அவர்கள் முதலில் செய்ய வேண்டிய நல்ல செயல் எது தெரியுமா? அவர்கள் முதலில் தங்களது கோபத்தை அடக்க வேண்டும். பிறகு வெறுப்பு வெறுத்தல் என்ற இத்தன்மைக்கு முடிவான விடை கொடுத்துவிடலாம்.

❖❖❖

ஒரு மனிதன் மற்றொரு மனிதனை தாக்க வேண்டும் என்று எண்ணினால் அவனை தூண்டும் தன்மை எது தெரியுமா? மேற்சொன்ன வெறுப்பு என்ற தன்மையே.

❖❖❖

உலக வரலாறு இத்தன்மையை இப்படித்தான் கூறுகிறது. உலகில் எந்த நாடும் ஒரு நாடும் மற்றொரு நாட்டை வெறுக்கும் தன்மையை தூண்டும்படியாக மறைமுகமாவோ, நேர்முகமாகவோ பிரச்சாரம் செய்யக்கூடாது. இதற்காக நவீன சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி இவைகளை உபயோகப்படுத்துதல் ஆகாது. இவைகளின் மூலமாக மறைமுக அரசாங்கம் நடத்துவதும் கெடுதலாகும். இத்தகு இமாலயத்தவறைச் செய்யாதீர்கள்.

❖❖❖

மனிதனிடத்தில் தோன்றுகின்ற சிறிய உணர்ச்சியே வெறுப்பு. இத்தன்மை சில சமயங்களில் தவறான முறைகளை கையாளுவதாலும் பிரச்சாரம் செய்வதாலும் அப்பிரச்சாரத்தை கேட்பதாலும் வெறுப்பு பூதாகாரமாகிறது. நாம் இவைகளனைத்தையும் கண்டனம் செய்ய வேண்டும்.

❖❖❖

ஒரு உதாரணத்தை கவனியுங்கள். சிலர் சிலரின் மீது அன்பை பொழிவதற்கு பதிலாக வெறுப்பை பொழிகிறார்கள். இது எப்படிப்பட்டது தெரியுமா? ஒரு சிலர் சில மிருகங்களை வெறுப்பதற்கு ஒப்பாகும். பூனை, பல்லி இவைகளை சிலர் வெறுப்பதில்லையா? வேறு சிலர் சில மிருகங்களை வெறுப்பார்கள். சில மிருகங்களை அன்புடன் வளர்ப்பார்கள். இக்காரணம் பற்றியே வெறுப்பு என்ற உணர்வை சில மனிதர்களின் தன்மையாகி விட்டது என்று சொல்லுகிறார்கள்.

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**








www.aanmeegamalar.com

# முருகனும் ஆறுபடை வீடும் முக்கியத்துவம் வாய்ந்த சிறப்புகள்

நெருப்புப் பிழம்பான ஈசனின் நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றியவர் முருகப்பெருமான். அவர் அவதரித்தது, வைகாசி மாதம் விசாக நட்சத்திரம் என்று புராணங்கள் தெரிவிக்கின்றன.

அன்றைய தினம் முருகப்பெருமான் வீற்றிருக்கும் அனைத்து தலங்களிலும் வைகாசி விசாகத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும். இந்நாளில் முருகனின் அறுபடை வீடுகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. அவைகளை இங்கே பார்ப்போம்.

### திருப்பரங்குன்றம்

அறுபடை வீடுகளில் முதலும் மூலாதாரமுமான திருத்தலம் இது. முருகப்பெருமான் சூரனை வதம் செய்தபின், இந்திரனின் மகள் தெய்வானையை கைப்பற்றிய சிறப்புமிகு தலம் திருப்பரங்குன்றம். அழகில் சிறந்த முருகன் தனது மனைவி தெய்வானையுடன் திருமணக் கோலத்தில் காட்சி தருகிறார்.

முருகனின் உருவம் புடைப்புச் சிற்பமாக அமைந்திருப்பதால், இங்கு ஞானத்தின் அடையாளமாக விளங்கும் பார்வதி தேவி முருகப் பெருமானுக்கு அளித்த வேலுக்குத் தான் அபிஷேகம் நடைபெறுகிறது. இங்கு சரவணப்பொய்கை, லட்சுமி தீர்த்தம் போன்ற தீர்த்தங்கள் உள்ளன. தெய்வத்திருமணங்களில் புகழ்பெற்ற முருகன் தெய்வானை திருக்கல்யாணம் தேவர்கள் சூழ நடைபெற்ற தலம் என்பதால், திரு மணத் தடை இருப்பவர்கள் இங்கு திங்கள், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் வழிபாடு செய்யலாம். இதனால் விரைவில் திருமணம் நடைபெறும்.

இவை மட்டுமின்றி, ஈசனையே எதிர்த்து வாதம் புரிந்ததுடன் 'நெற்றிக்கண்திறப் பினும் குற்றம் குற்றமே' என்ற நக் கீரர் வாழ்ந்த புண்ணிய பூமி இது.




பவுர்ணமியன்றுஇம்மலையை கிரிவலம் வருவதும் நன்மை அளிக்கும். மலையின் தென்புறம் உள்ள சமணர்காலத்திய குடைவரைக் கோவில்களும், மலை மேல் உள்ள காசி விஸ்வ நாதர் கோவிலும், வற்றாத சுனையும், மச்சமுனி எனும் சித்தரின்சமாதியும் இத்தலத்தின் சிறப்பு களாகும்.

மதுரை திருநெல்வேலிமார்க்கத்தில் உள்ள இத்தலத்தில் முருகனுக்குரிய அனைத்து விழாக்களும் கொண்டாடப்பட்டாலும், வைகாசிப் பெருவிழா முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

## திருச்செந்தூர்

முருகன் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளில், இரண்டாவது தலம். கடற்கரையோரம் எழிலாக அமைந்திருக்கும் இந்த ஆலயம், சூரபதுமனை முருகப்பெருமான்அழித்த இடம். இங்கு ராஜ அலங்காரத்தில் சண்முகனாக, கைகளில் அன்னை தந்த வேல் தாங்கி வெற்றிவீரனாக அருள்கிறார் முருகப்பெருமான்.

பிறப்பால் ஊமையான குமர குருபர சுவாமிகள், தனது ஐந்தாவது வயதில் இத்தலம் வந்து பேசும் திறனைப் பெற்ற அதிசய தலம் திருச்செந்தூர். முருகன் தன் கைகளில் ருத்ராட்ச மாலையும் தாமரை மலரும் கொண்டு பூஜிக்கும் அருட் கோலத்தில் இங்கு காட்சி தருகிறார்.


அழகுராஜா

இங்குள்ள நாழிக் கிணறு மற்றும் கடல் தீர்த்தங்கள்இங்குவரும் பக்தர்களின் அனைத்து நோய் களையும் போக்கும் ஆற்றல் கொண்டது.

இந்த ஆலயத்தின் மேற்குப் பகுதியில் உள்ள ராஜகோபுரம் மிகவும் பெரியது. மூலவ ரான சுப்பிரமணியர் கிழக்கு பார்த்தும்,சண்முகம் தெற்கு நோக்கியும் அருள்புரிகின்றனர். கருவறையின் வடக்குப்பகுதியில் உள்ள சிறிய வாசலில் நுழைந்து சென்றால், முருகப்பெருமான் வழிபட்ட பஞ்ச லிங்கங்களை தரிசிக்கலாம்.

ஐப்பசியில் இங்கு நடைபெறும் கந்தசஷ்டிப் பெருவிழா வெகு பிரசித்தம். சூரனை சம்ஹாரம் செய்த இடம் என்பதால் அந் நாளில் நிகழும் சூரசம்ஹாரத்தைக் காண பல லட்சம் பக்தர்கள் கூடுவது தனிச்சிறப்பு.

தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள இத் தலத்திற்குச் செல்ல ரயில் வசதிகளும், பேருந்து வசதிகளும் உண்டு.

## திருவாவினன்குடி (பழநி)

கந்தனின் அறுபடை வீடுகளில் மூன்றாவது தலம் இது. பழநி மலையடிவாரத்தில் சற்று மேல் புறத்தில் அமைந்துள்ளது திருவாவினன்குடி ஆலயம். திருமகளும், அலைமகளும், காமதேனுவும் பூஜித்த தலம். மலை உச்சியில் அமைந்துள்ள பாலதண்டாயுதபாணிசிலை நவபாஷாணத்தால் செய்யப்பட்டது. இதனைச் செய்தவர் சித்தர்களில் ஒருவரான போகர்.

சித்திரை மாதம் அக்னி நட்சத்திர காலத்தில் நவபாஷாண சிலையை, இங்கு போகர் பிரதிஷ்டை செய்ததாக கூறப்படுகிறது. எனவே அக்னி நட்சத்திர நாட்கள் இங்கு விசேஷமாக உள்ளது. ஆண்டி கோலத்தில் மேற்கு நோக்கி அருளும் இத்தல இறைவன், இங்கு பாலகனாக வீற்றிருக்கிறார்.

இங்கு இறைவனின் நவபாஷாண சிலையின் மீது சாத்தப்பட்ட சந்தனம், மிகவும் புனிதமான பிணி தீர்க்கும் மருந்தாக மாறுகிறது. இங்கு அபிஷேகம் செய்த பஞ்சாமிர்தமும், விபூதியும் கூட நம்பினோரின் நோய் களை நீக்கி நன்மை செய்கிறது. இந்த ஆலயத்திற்கு காவடி எடுத்து




நேர்த்திக்கடன் செலுத்துவது பிரசித்தி பெற்ற நிகழ்வாகும்.

போகர் முனிவருடன் அருணகிரிநாதர், நந்தியடிகள், தேவராய சுவாமிகள், நக்கீரர் போன்ற எண்ணற்ற முனிவர்கள், சித்தர்கள் இங்கு வழிபட்டு பேறு பெற்றுள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள இத்தலத்திற்கு செல்ல தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பேருந்து வசதி உள்ளது.

**திருவேரகம் (சுவாமிமலை)**

முருகப்பெருமான், தன் தந்தையான ஈசனுக்கே உப தேசம் செய்த தலமான சுவாமிமலை. இது அறுபடை வீடுகளில் நான்காவதாக குறிப்பிடப்படுகிறது. சுவாமி என்பது இங்கு எல்லோருக்கும் பெரியவனாகிய சிவபெருமானையேக் குறிக்கிறது. இருப்பினும் மகனுக்கு சீடனாக இருந்து ஈஸ்வரன் உபதேசம் பெற்றதால், குருவாகிய முருகனுக்கு மேலே உயரத்தில் சன்னிதியும், கீழே சிவனுக்கு சன்னிதியும் அமைந்துள்ளது. இங்கு உள்ள 64 படிகளில் 60 படிகள் 60 ஆண்டுகளையும், 4 படிகள் 4 யுகங்களையும் குறிப்பதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆலயத்தின் நுழைவு வாசலில் சிவனின் இடது தோளில், குழந்தையாக வடிவேலன் அமர்ந்து உபதேசம் செய்யும்காட்சி சுதை சிற்பமாக உள்ளது. பாம்பன் சுவாமிகள், அருணகிரிநாதர், கச்சியப்ப சிவாச்சாரியார் போன்ற பல யோகிகள் பாமாலை பாடி இங்குள்ள முருகனை துதித்துள்ளனர்.

இங்கு வழிபடும் பக்தர் களுக்கு கல்வி வளம், குழந்தைப் பேறு கிடைக்கும். குரு மூர்த்த சன்னிதி என்பதால், இங்கு உபநயனம் எனப்படும் பூணூல் விழாக்கள் நடத்துவது பிரசித்தமாகும்.

கும்பகோணத்தில் இருந்து திருவையாறு செல்லும் சாலையில் சுமார் 3 கிலோ மீட் டர் தொலைவில் உள்ள இத்தலத்திற்குச் செல்ல

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

வசதியாக பேருந்துகள் இயங்குகின்றன.



## பழமுதிர்சோலை (அழகர்மலை)

அறுபடைவீடுகளில் முருக பக்தர்களின் மனம்கவரும் வகையில் அமைந்த தலம் இது. பசுமையான சூழலில் மலை மீது அமைந்துள்ள இந்த ஆலயத்தில் வள்ளி தெய்வானையுடன் தம்பதி சமேதராக முருகப்பெருமான் அருள்புரிந்து வருகிறார். அழகர்கோவிலுக்கு மேலே சுமார் நான்கு கிலோமீட்டர் உயரத்தில் இக்கோவில் அமைந்துள்ளது.

தொடக்கத்தில் முருகனின் அம்சமாக வேல் வைத்து வழிபாடு நடைபெற்று வந்தது. தற்போது சிலை ரூபத்தில் பிரதிஷ்டை செய்து வணங்கும் முறை உள்ளது. தமிழ்க் கடவுளான முருகன் சிறுவனாக வந்து, நாவல் மரத்திலிருந்து நாவல் பழங்களை உதிர்த்து தமிழ் மூதாட்டி அவ்வையிடம் 'சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' எனக்கேட்டு வாழ்வின் தத்துவத்தை விளக்கிய தலம் இது. 'பழம் உதிர் சோலை' என்பதே 'பழமுதிர்சோலை' என்றானது.

இதன் அருகே உள்ள நூபுரகங்கை எனும் தீர்த்தம் மிக பிரசித்தி பெற்றது. இதன் உற்பத்தி ஸ்தானத்தை இன்னும் கண்டறிய முடியாததே இதன் சிறப்பு. இங்குள்ள தீர்த்தங் களுக்கு காவல் தெய்வமாக ராக்காயி அம்மன் உள்ளார். இவருக்கு அமாவாசை தினத்தில் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

பழமுதிர்சோலை அடிவாரத்தில் அமைந்துள்ள அழகர் கோவிலும் பிரசித்தி பெற்றது என்பதால் இங்கு வரும் பக்தர்கள் ஏராளம்.

## திருத்தணி

சூரபதுமனையும், அவனது சகோதரர்களான சிங்கமுகன், தாரகாசூரன் ஆகியோரையும் முருகப்பெருமான் வதம் செய்தார். அவர்களின் அழிவு வழி போர்க் கோலத்துடன் ஆவேசமாக இருந்த முருகப்பெருமான், தன்னுடைய கோபம் தணிய வந்து அமர்ந்த தலம் திருத்தணி. 'செரு' என்றால் கோபம் என்றும், 'தணி' என்றால் 'குறைதல்' என்றும் பொருள். முன்காலத்தில் 'செருத்தணி' என்று அழைக்கப்பட்டு வந்த ஊரே தற்போது 'திருத்தணி' என்று வழங்கப்படுவதாக கூறுகிறார்கள்.

முருகப்பெருமானின் ஐந்தாவது வீடு இது. முருகப்பெருமான், குறத்திப் பெண்ணான வள்ளியை மணம் புரிந்து கொண்டதும் இந்தத் தலத்தில்தான். சுமார் 400 அடி உயரமுள்ள சிறிய மலைமீது பக்தர்கள் செல்ல வசதியாக 365 படிகள் உள்ளன. வருடத்தின் நாட்களை இப்படிகள் குறிப்பதாக சொல்லப்படுகிறது.

தணிகைநாதன், தணிகேசர், தணிகைவள்ளல் என்றெல்லாம் புகழப்படும் இந்த தல நாயகனுக்கு ஆடிக்கிருத்திகை மிகவும் விசேஷம். வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகள் தொடங்கி வைத்த திருப்படி பூஜையும் இங்க நடைபெறுகிறது.

அருணகிரிநாதர், முத்துசாமி தீட்சிதர், ராமலிங்க வள்ளலார், கச்சியப்ப தேசிகர் போன்ற மகான்கள் இங்கு வந்து தணிகைநாதனின் அருட்பார்வை பெற்றுள்ளனர்.

– முதன்மை
செய்தியாளர்
அழகுராஜா
தொலைபேசி எண்:
9994162182



# அற்புதமான பலன்களை கொண்ட திராட்சையும், திராட்சை விதையும்

திராட்சையில் ஊட்டச்சத்துக்கள் மற்றும் அத்தியாவசிய கொழுப்பு அமிலங்கள், அமினோ அமிலங்கள் மற்றும் சக்தி வாய்ந்த ப்ளேவோனாய் டுகள் போன்றவை ஏராளமாக நிறைந்துள்ளது.

அந்தவகையில் திராட்சையில் உள்ள விதை களிலும் அதோ அளவு எண்ணற்ற சக்துக்களும் நிறைந்துள்ளது.

திராட்சை விதைகளில் சக்தி வாய்ந்த ஆன்டிஆக்ஸிடன்ட்டுகள் மற்றும் தாவர வகை உட்பொருட்களான ஏிறிசிஉ உள்ளன.

இது உடலில் ப்ரீ ராடிக்கல்களை அழிக்க உதவுவதோடு, இளமையிலேயே முதுமைத்தோற் றம் பெறுவதைத் தடுக்கும் மற்றும் குறிப்பிட்ட நாள்பட்ட நோய்களின் அபாயத்தையும் தடுக்கும்.

இப்போது திராட்சையை விதையுடன் சாப்பிடு வதால் கிடைக்கும் நன்மைகள் என்னவென்று காண்போம்.

திராட்சை விதை கள் இரத்த நாளங் கள் மற்றும் தமனிகளில் பாதிப்பு ஏற்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கும். இதனால் உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதர இதய பிரச்சனைகளின் தாக்கமும் குறையும்.

திராட்சை விதைகளில் உள்ள உட்பொருட்கள், உடலில் வைட்டமின் சியின் செயல்பாட்டை தூண்டிவிட்டு, கொலாஜன் உற்பத்தியைமேம் படுத்தும் மற்றும் இரத்த நாளங்களில் உள்ள பாதிப்பை சரிசெய்யும் செயல்பாட்டை வேகப் படுத்தும்.

திராட்சை விதைகளில் வைட்டமின் ஈ நோயெ திர்ப்பு மண்டலத்தின் செயல்பாட்டை மேம்படுத்த உதவும். இதில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்டுகள் வைட்டமின் சியை விட 3050 மடங்கு சக்தி வாய்ந்ததாகும்.

நீண்ட நேரம் உட்கார்ந்தவாறே வேலை செய் பவர்கள், தினமும் திராட்சையை விதையுடன் சாப்பிட்டு வந்தால், அது கால்களில் ஏற்படும் வீக்கத்தைத் தடுக்கும்.



www.aanmeegamalar.com




திராட்சை விதைகள் உடலில் தேங்கியுள்ள கொழுப்புத் தேக்கத்தைத் தடுப்பதோடு, உடலில் கொழுப்புக்களின் அளவையும் குறைக்கும்.

திராட்சை விதையை சாப்பிட்டால், அது உடலின் ஆற்றலை மேம்படுத்தும் மற்றும் உடலின் மெட்டபாலிசத்தை வேகப்படுத்தும். இதன் விளைவாக உடல் எடை வேகமாக குறையும்.

திராட்சை விதைகளில் உள்ள அதிகளவிலான ப்ளேவோனாய்டுகள், உடலில் கொலஸ்ட்ரால் அளவைக் குறைப்பதோடு, நல்ல கொலஸ்ட்ரால் மற்றும் கெட்ட கொலஸ்ட்ராலை சமநிலையில் பராமரிக்கும். இதன் விளைவாக தமனிகள் மற்றும் இரத்த நாளங்களில் கொழுப்புக்கள் படிந்து ஏற்படும் அபாயம் குறைந்து, மாரடைப்பு, பக்கவாதம், கரோனரி இதய நோய்களின் அபாயமும் குறையும்.

திராட்சை விதைகளில் உள்ள எிறிசிடீ அறிவாற்றல் செயல்பாட்டைத் தூண்டி, மனதை ஒருமுகப்படுத்தும் திறன், நினைவாற்றல், நல்ல மனநிலை போன்றவை மேம்படும்.

திராட்சையை விதைகளுன் சாப்பிட்டால், அது அல்சைமர் நோய் மற்றும் நரம்பு சிதைவு நோயின் அபாயத்தைக் குறைக்கும்.

அறிவாற்றல் சிறப்பாக இருக்க நினைத்தால் திராட்சையை விதையுடன் சாப்பிடுங்கள்.

திராட்சை விதையை சாப்பிட்டால், அது சரும புற்றுநோயின் தீவிரத்தைக் குறைக்கும் மற்றும் சருமத்தில் கட்டிகள் உருவாகி வளர்ச்சி அடைவதைக் குறைக்கும்.

திராட்சை விதைகள் மார்பக புற்றுநேய் மற்றும் புரோஸ்டேட் புற்றுநோயின் எதிர்த்துப் போராட உதவும்.

திராட்சை விதைகள் ப்ரீராடிக்கல்களை எதிர்த்துப் போராடி, நோய்களின் அபாயத்தை அதிகரிக்கும் செல்லுலார் பாதிப்பைத் தடுக்கும்.

திராட்சை விதைகளில் ஆன்டிபாக்டீரியல் மற்றும் ஆன்டிஹிஸ்டமைன் பண்புகள், அலர்ஜியை எதிர்த்துப் போராடவும், நுரையீரலில் ஏற்படும் தொற்றுக்கள் மற்றும் இதர நோய்களைத் தடுத்து பாதுகாத்து, அதன் செயல்பாட்டை சிறப்பாகவும் வைத்துக் கொள்ளும்.

திராட்சை விதைகளை சாப்பிட்டால், அது சளி, காய்ச்சல் போன்றவற்றின் அபாயத்தைக் குறைத்து, சுவாச மண்டலத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளும்.

திராட்சை விதைகளில் உள்ள அழற்சி எதிர்ப்பு பண்புகள் மற்றும் ஆன்டிபாக்டீரியல் பண்புகள், நுண்ணுயிர்களின் வளர்ச்சியைத் தடுத்து, பல்வேறு வகையான தொற்றுக்களைத் தடுக்கும்.

திராட்சை விதைகளில் இருக்கும் அழற்சி எதிர்ப்பு பண்புகள், ஆர்த்ரிடிஸ், திரவ தேக்கம், அல்சர், சைனஸ் பிரச்சனை மற்றும் சிறுநீரக பாதை தொற்றுக்களின் தீவிரத்தைக் குறைக்க உதவும்...



# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க













## aanmeegamalar.com

# இணையதளத்தை

## பார்க்கவும்









# குரு மூர்த்தமான முருகன், குடும்பத்திற்கே மோட்சம் கொடுக்கும் சிவன் படிப்பில் மேன்மைபெற செல்லவேண்டிய திருத்தலம்





www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

தமிழ் நாடு மன்னார்குடி திருத்துறைப்பூண்டி சாலை வழியில் மன்னார்குடியில் இருந்து தெற்கே 21 கி.மி. தொலைவிலும், திருத்துறைப்பூண்டியில் இருந்து வடமேற்கே 10 கி.மி. தொலைவிலும் அமைந்திருக்கிறது அருள்மிகு அமுதவல்லி அம்மன் உடனுறை பாரிஜாதவனேஸ்வரர் திருக் கோயில்.

**கோவில் சிறப்புகள்:**

- துர்வாசருக்கு இறைவன் நடனக் காட்சி தந்தது.
- கேது தோஷ பரிகாரத் தலம்
- இத்தலத்தில் வழிபாடு செய்தால், குடும்பத் தில் உள்ள அனைவருக்கும் மோட்சம் கிடைக்கும் என்பதும் இத்தலத்தின் சிறப்பு அம்சமாகும்.
- காவிரி தென்கரைத் தலங்கள் வரிசையில் 105வது தலமாக விளங்குவது திருக்களர் திருத்தலம்.
- தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 168 வது தேவாரத்தலம் ஆகும்.

**இறைவர் திருப்பெயர்:**
களர்முளை நாதர், பாரி ஜாதவனேஸ்வரர்

**இறைவியார் திருப்பெயர் :**
இளங்கொம்பன்னாள், அமுதவல்லி, அழகேஸ்வரி

**தல மரம்:** பாரிஜாதம் (பவளமல்லி)

**தீர்த்தம்:** துர்வாசர் தீர்த்தம், பிரமதீர்த்தம், ருத்ர தீர்த்தம், ஞான தீர்த்தம்

**வழிபட்டோர்:** பராசர முனிவர், துர்வாசர், கால பைரவர்






தேவாரப் பாடல்கள்: சம்பந்தர்

நீருளார் கயல் வாவி சூழ்பொழில் நீண்ட
மாவய லீண்டு மாமதில்
தேரினார் மறுகில் விழாமல்கு திருக்களருள்
ஊரு ளாரிடு பிச்சை பேணும் ஒருவனே
யொளிர் செஞ்ச டைம்மதி
ஆரநின் றவனே அடைந்தார்கு அருளாயே.

## தலவரலாறு

களர் நிலத்தில் உள்ள கோயிலாததால்,இப்பெயர் பெற்றது. துர்வாசருக்கு இறைவன் நடனக் காட்சி தந்தது.கோவில் அமைப்பு: காவிரி தென்கரைத் தலங்களில் 105 தலமாக விளங்கும் இத்தலம் ஊரின் நடுவே கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

ஆலயத்தின் எதிரே நான்கு பக்கங்களிலும் நான்கு படித்துறைகளைக் கொண்ட பெரிய திருக்குளம் உள்ளது. 80 அடி உயரமுள்ள இராஜ கோபுரம் 5 நிலைகளை உடையது. கோபுரத்தில் அழகிய சுதைச் சிற்பங்கள் உள்ளன. இவ்வாலயம் மூன்று பிரகாரங்களைக் கொண்டுள்ளது. பவள மல்லிகை தலவிருட்சமாக உள்ளது.

அம்மன் சந்நிதி கருவறைச் சுற்றில் சிம்ம வாகனத்தில் அமர்ந்துள்ள அஷ்டபுஜ துர்க்கை சந்நிதி உள்ளது. வலம்புரி விநாயகர் சந்நிதியும், துர்வாசர் சந்நிதியும், விஸ்வநாதர், கஜலட்சுமி, 63 நாயன்மார்கள் சந்நிதிகளும் இவ்வாலயத்தில் உள்ளன. துர்வாச தீர்த்தம், ஞான தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், ருத்ர தீர்த்தம் ஆகியவை இவ்வால யத்திலுள்ள தீர்த்தங்கள் ஆகும்.

இத்தலத்தில் உள்ள முருகப் பெருமான் மிக்க அழகுடன் காட்சி தருகிறார். ஆறு முகங்களுடன்வள்ளி தெய்வானையுடன் இல்லாமல், தனியே குரு மூர்த்தமாக அருள் புரிகிறார். முருகப் பெருமான் 60,000 முனிவர்களுக்கும், துர்வாசருக்கும் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசம் செய்தது இத்தலத்தில்தான் என்பது ஐதீகம். கல்வியில் மேன்மை பெற இவரை வழிபடுவது சிறப்பு. இத்தலம், முருகப் பெருமானின் திருப்புகழ் வைப்புத் தலமாக உள்ளது.


சிவத்திரு.குமரேசன்

பதஞ்சலி முனிவருக்கும், வியாக்ரபாதருக்கும் சிவபெருமான் ஆனந்த தாண்டவ தரிசனம் தந்தருளியதை அறிந்த துர்வாச முனிவர் தானும் அந்த பாக்கியத்தைப் பெற விரும்பினார். துர்வாச முனிவர் இத்தலத்தின் மகிமையை உணர்ந்து தேவலோகத்தின் சிறந்த மலரான பாரிஜாதத்தை இங்கு கொண்டு வந்து வைத்து வளர்க்களானார். அது நாளடைவில் மிகவும் பெருகி பாரிஜாத வனமாயிற்று.

பிறகு துர்வாச முனிவர் ஒரு சிவலிங்கம் அமைத்து பாரிஜாத மரத்தடியில் பிரதிஷ்டை செய்து பக்கத்தில் அம்மனையும் ஸ்தாபித்து தேவ தச்சன் மூலமாக இக்கோவிலை எடுப்பித்தார் என்று தலவரலாறு கூறுகிறது.

இத்தலத்தில் துர்வாச முனிவருக்கு இறைவன் நடராஜர் பிரமதாண்டவ தரிசனம் கொடுத் தருளியதால் துர்வாசர் இத்தலத்தில்.எப்போதும் நடராஜ பெருமானின் பிரமதாண்டவத்தை தரிசித்துக் கொண்டிருக்கிறார் என்பது ஐதீகம்.

இதன் அடையாளமாக இவ்வாலயத்தில் துர் வாசர் சந்நிதியும், நடராஜர் சந்நிதியும் எதிரெதிரே அமைந்துள்ளது. நடராஜ பெருமானின் 8 தாண்டவ தலங்களுள் இரண்டாவது தலமாக திருக்களர் தலம் அமைந்திருக்கிறது.

இத்தலத்தில் வழிபாடு செய்தால் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் மோட்சம் கிடைக்கும். கேது தோஷத் தினால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு வழிபட்டால் தோஷம் நிவர்த்தியாகும்.

இத்தலம், ஊரின் நடுவே கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.


– சிவத்திரு.குமரேசன்
இராஜசிம்மன்
உதவிப் பேராசிரியர் SRM கலை
மற்றும் அறிவியல் கல்லூரி
919003296221 easanaithedi.in







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**

(geetha samayal)

youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# ஆன்மீக வழியில் அமைதி

39

மனிதன் ஆன்மீக வழியில் அமைதி காண வேண்டுமானால் உலகில் சத்தியம் அசத்தியம் எது என்பதைப்பற்றி தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். தூரத்தில் கிடக்கும் கயிறை சில நேரங்களில் நாம் பார்த்துவிட்டு, பாம்பு என்று மனதில் நினைத்துகொண்டு பயந்து விடுகிறோம், அதன் அருகிலே செல்வதற்குகூட பயந்துகொண்டு நின்று விடுகிறோம். அந்தக் கயிற்றை அருகில் இருந்து பார்த்துவிட்டு வந்தவன் கயிறு என்று நம்மிடம் கூறியதற்குப் பிறகு அல்லது நாம் அருகில் சென்று பார்த்தபின்பு அது பாம்பு அல்ல கயிறு என்று முடிவுக்கு வந்து விடுகிறோம். அதுபோல்தான் கயிறு என்பது சத்தியம், கயிற்றினை பாம்பு என்று நாம் நினைத்து பயந்து கொண்டு இருந்தது அசத்தியம் அல்லது நித்யா ஆகும்.

விவேக அறிவு மூலம் சத்தியம் அசத்தியம் எது என்பதை அறிந்து கொள்ள முடியும். விவேக அறிவு என்பது கயிறா, பாம்பா என்பதை உண்மைத் தன்மையை அறிந்து கொள்வது போன்றதாகும். உலகில் காணப்படும் இன்பங்கள் எல்லாம் சத்தியமானது நிரந்தரமானது என்று நாம் அனைவரும் நினைத்துக் கொண்டு இருக்கிறோம். அதில் மனிதன் மதி மயங்கிக் கிடக்கிறான். உலகில் காணும் இன்பங்ககளை மனிதன் மகிழ்ச்சியாக நன்கு அனுபவவிக்கிறான். அவ்வாறு அனுபவிக்கும்போது சில நேரங்களில் அவன் துன்பப்படும்போதுதான் அவன் காணும் அல்லது அனுபவிக்கும் இன்பங்கள் எல்லாம் நிரந்தரம் அல்ல என்பதை அனுபவபூர்வமாக உணர்கிறான். அதேபோல் உலகில் காணும் துன்பங்களும் நிரந்தரம் அல்ல. துன்பங்கள் நிரந்தரம் அல்ல என்பதை மனிதன் துன்பத்திலிருந்து விடுதலை அடைந்து இன்பத்தை அனுபவவிக்கும்போது அவன் உணர்ந்து கொள்ள முடியும்.

ஆன்மீக நோக்கில் சிந்தித்துப் பார்த்தால் ஆத்மா என்பது நிரந்தரம். ஆத்மா என்பது சத்தியமானது ஆகும். ஆத்மா என்பது எது? என்பதை நாம் எளிதில் புரிந்து கொள்ள வேண்டுமானால் அதனை 'நான்' என்ற சொல்வதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம். 'நான்' என்று நாம் சொல்வது நமது உடலை மட்டும் நினைத்துக்கொண்டு இருக்கிறோம். அதனை ஆன்மீக வழியில் சிந்தித்துப் பாருங்கள். 'நான்' என்பது நமது உடலில் இருக்கும் உயிர் அல்லது ஆத்மா என்பதை புரிந்து கொள்ள முடியும்.

எடுத்துக்காட்டாக ராஜா என்ற பெயரில் ஒருவன் இருக்கிறான் அவன் இறந்து விடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்போது பேச்சு வழக்கில் ராஜாவை எப்போது எடுக்கப் போகிறீர்கள் என்று யாரும் கேட்பதில்லை. பாடியை (இறந்த உடல்) எப்போது எடுக்கப் போகிறீர்கள் என்றுதான் கேட்பார்கள். ராஜாவின் உடலில் உயிர் இருக்கும்வரை ராஜா



என்று அவனை அழைக்கிறோம். உடலை விட்டு உயிர் அல்லது ஆத்மா பிரியும்போது ராஜா என்ற பெயரும் மரியாதையும் போய் விடுகிறது. இதிலிருந்து ஆன்மீக வழியில் சிந்தித்துப் பார்க்கும்போது உடல் என்பது ஆத்மா அல்ல என்பதை புரிந்து கொள்ளலாம்.

நாம் காலை முதல் இரவு படுப்பதற்குப் போகும்வரை உலகில் அதிகமாக கூறும் சொல் இந்த 'நான்' என்ற சொல்லாகும். அடுத்து அதிகமாக சொல்லும் சொல் 'என்னால்', 'என்னுடையது' என்ற சொற்கள் ஆகும். பொதுவாக நாம் ஒரு சொல்லைப் பயன்படுத்தும்போது அதனைப்பற்றி நம்மை அறியாமல் மனதில் நினைத்துக் கொண்டபிறகுதான் அதனைப் பயன்படுத்துகிறோம். எடுத்துக்காட்டாக நான் படித்துக் கொண்டிருக்கிறேன், நான் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறேன். இதில் 'நான்' என்ற சொல்லின் பொருள் இங்கு உடலை மட்டும் எண்ணிக்கொண்டு சொல்கிறோம்.

இந்த 'நான்' என்ற பொருள் தரக்கூடிய மற்றொரு சொல் 'என்னுடையது' 'என்னால்' என்பது ஆகும். எடுத்துக்காட்டாக இந்த நீலக்கலர் பேனா என்னுடையது. இந்தப் படம் என்னால் வரையப்பட்டது. 'என்னால்', 'என்னுடையது' என்ற சொற்களும் 'நான்' என்ற பொருள் தரக்கூடியதுதான். சில இடங்களில் இந்த 'நான்' என்பதைப் பயன்படுத்த முடியாது. 'நான்' என்ற கூறும் சொல் நம் மனதில் நினைத்து கொண்டு, சொல்வது, பேசுவது, இந்த உடலை நினைத்துக்கொண்டுதான் சொல்கிறோம். அதேபோல் என்னால், என்னுடையது என்று கூறுவதும் நம் உடலை மனதில் நினைத்துக்கொண்டுதான் கூறுகிறோம். நான் என்பது நமது உடல் என்ற பொருள் தரக்கூடிய சொல்தானே என்று எல்லா இடங்களிலும் இந்த 'நான்' என்ற சொல்லைப் பயன்படுத்த முடியாது. அவ்வாறு பயன்படுத்தினால், அல்லது நினைத்துப் பார்க்கும்போது அது நகைச்சுவையாக இருக்கும்.

எடுத்துக்காட்டாக நாம் உடல்நலக்குறைவு காரணமாக டாக்டரை சென்று பார்க்கிறோம். டாக்டர் நோயாளியிடம் உங்கள் உடலுக்கு என்ன செய்கிறது என்று கேட்பார். இந்த இடத்திலும் நான் என்ற சொல் உடல் என்ற பொருளைத்தான் கொடுக்கிறது என்று நினைத்துக் கொண்டு அவரிடம் 'நான்' (உடல்) நலமில்லாமல் இருக்கிறது என்று கூறினால் அந்த டாக்டர் சிரித்துக்கொண்டே என்ன சொல்வார் என்பதை நினைத்துப் பாருங்கள். உலகப் பார்வையில் 'நான்' என்பதை உடலைக் குறிக்கும். அது மருத்துவருக்குப் புரிந்து கொள்ள முடியமா? எனவே 'நான்' என்ற சொல்லை இடத்திற்குத் தகுந்தாற்போல் பயன்படுத்துவதற்கு அறிந்து கொள்ள வேண்டும். அதாவது அறிவுபூர்வமாக அந்தச் சொல்லை பயன்படுத்த வேண்டும். இந்த 'நான்' என்ற சொல் மனம், அறிவு மற்றும் உடல் என்ற மூன்று நிலைகளிலும் இருந்துகொண்டு பொருள் கொடுக்கக் கூடியது.

ஆன்மீக வழியில் எளிதில் புரிந்து கொள்ள வேண்டுமானால் ஆத்மா என்பது 'நான்' என்ற சொல்லின் பொருள் ஆகும். நான் என்ற சொல் அறிவுபூர்வமான சொல் ஆகும். அதேபோன்று 'நான்' என்பது உணர்வு பூர்வமான சொல் ஆகும். நான் என்ற சொல்லின் பொருள் மற்றொரு



இடத்தில் மனதையும் குறிக்கும். எப்படி என்றால் நான் என்று நாம் கூறும்போது 'நான்' என்பதை நினைப்பது முதலில் நம் மனம்தான் என்பதை இந்த இடத்தில் புரிந்துகொள்ள வேண்டும். எனவே ஆத்மா என்பது உடல், மனம், அறிவு என்ற மூன்று நிலைகளிலும் செயல்படுகிறது. அதாவது ஆத்மா ஒவ்வொரு மனிதனிடமும் மனம், அறிவு மற்றும் உடல் என மூன்று நிலைகளிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

நான் படித்துக் கொண்டு இருக்கிறேன் என்பதில் நான் என்ற சொல் உடலைக் குறிக்கிறது. நாம் படித்துக் கொண்டிருக்கும்போது ஒருவர் உங்களிடம் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்கிறார் என்று வைத்துக் கொள்வோம். நாம் என்ன அவரிடம் கூறுவோம். நான் படித்துக் கொண்டு இருக்கிறேன் என்றுதான் கூறுவோம். இந்த இடத்தில் 'நான்' என்ற சொல் நமது மனதில் தோன்றியபின்தான் அவரிடம் 'நான்' என்ற சொல்லைப் பயன்படுத்திக் கூறுகிறோம். இந்த இடத்தில் சிந்தித்துப் பார்த்தால் 'நான்' என்ற சொல் நம் மனதாக செயல்படுகிறது. நாம் படித்துக் கொண்டிருக்கும்போது ஒருவர் உங்களிடம் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்டால் நான் படித்துக் கொண்டு இருக்கிறேன் என்பதில் படிப்பது என்ற செயலை கூறும்போது இந்த இடத்தில் அறிவாக 'நான்' என்ற சொல் செயல்படுகிறது.

எது உண்மையான நான்? நான் அல்லாதது என்ன? என்று சிந்தித்துப் பார்த்தால் ஆத்மா என்பது 'நான்' என்பதற்கு ஆன்மீக நோக்கில் சரியான சொல்லாகும். உண்மையின் தத்துவம் ஆத்மா ஆகும். உண்மைக்கு வேறுபட்டுக் காணப்படும் பொருள் தரக்கூடிய சொற்களெல்லாம் அனாத்மா ஆகும். அதாவது அனாத்மா என்பது எளிதில் புரிந்து கொள்ள வேண்டுமானால் அசத்தியம் என்பதாகும். நமது ஆத்மாவுக்கு எப்போதும் அழிவில்லை. ஆத்மா என்பது நிரந்தரமானது சத்தியமானது அனாத்மாவுக்கு அழிவு உண்டு. அது நிரந்தரமானதல்ல. ஆத்மா எது அனாத்மா எது என்பதை அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறு உணர்ந்து கொள்ள வேண்டுமானால் ஆன்மீக வழியில் சென்றால்தான் அதனைப் பற்றி எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

உலகில் நாம் காணும் இன்ப துன்பங்கள் நிரந்தரம் அல்ல என்ற நிலைக்கு நமது மனம் பக்குவப்பட வேண்டும். அவ்வாறு மனம் பக்குவப்பட்டு விட்டால் நாம் ஆத்மாவைப் பற்றி அறிந்து கொள்வதற்கு புரிந்துகொள்வதற்கு ஆன்மீக வழியில் நெருங்கி விட்டோம் என்பதை உணரலாம். ஒருவன் வியாபாரத்தில் ஈடுபட்டு அதில் எதிர்பாராதவிதமாக அதிகமாக லாபம் அடைந்து கார், பங்களா தோப்பு என்று அளவுக்கு அதிகமான சொத்துக்களை சேர்த்துக்கொண்டு மகிழ்ச்சி அடைகிறான். அவன் கவலையில்லாமல் இன்பத்தில் மிதந்து கொண்டிருக்கிறான். அவ்வாறு அவன் இன்பங்களில் மிதந்து அனுபவவித்துக் கொண்டிருக்கும்போது, நாம் அடைந்துள்ள இந்த இன்பங்கள்தான் வாழ்க்கையில் நிரந்தரமானது என்று எண்ணிக்கொண்டு இன்பத்தை நன்கு அனுபவவிக்கிறோம்.

வியாபாரத்தில் அவன் எதிர்பாராதவிதமாக பெருத்த நஷ்டம் அடைந்து ஈட்டிய கார், பங்களா தோப்பு அனைத்தையும் இழந்து துன்பத்தில் மூழ்கி விடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் அப்போது மனம் வருந்தி வாழ்க்கையில் விரக்தி நிலைக்கே சென்று விடுகிறான்.

அப்போதுதான் உலகில் அவன் துன்பம் என்பதையே உணர்கிறான். வியாபாரத்தில் லாபம் நஷ்டம் அடைந்து பொருள் நஷ்டம் அடைவது சகஜம் என்பதை உணர்ந்து மனம் தளராமல் இருக்க வேண்டும். நமது மனதை இன்பத்திலும் துன்பத்திலும் ஒரே நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு மனதை பக்குவ நிலைக்கு கொண்டு செல்லும்போது நாம் தேடும் விரும்பும் அமைதி இயல்பாக நமக்கு கிடைக்கும். .

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

எங்கள் சேவைக்கு உங்களின் உதவி தேவை

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)